பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 10 திங்கட்கிழமை (24-01-2000) UTHAYAN - A Lively, National Tamil Daily கதிர் :50

## இயக்கச்சி, மருதமடுப் பகுதிகளில் புலிகள் தொடர்ந்து தாக்குதல்!

இயக்கச்சி மற்றும் வன்னி மருதமடுப் பகுதிகளில் உள்ள பாதுகாப்பு முன்னரங்கநிலைகள் மீது விடுதலைப்புலிகள் தொடர்ச்சியாகத் தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என பாதுகாப்புஅமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இயக்கச்சி முன்னரங்க நிலைகள் மீது நேற்றுமுன் தினம் காலை புலிகள் திடீர்த்தாக்குதல் ஒன்றை நடத்தினர் எனவும் -

படையினர் பதில் தாக்குதல் நடத்தி அதனை முறியடித்துவிட்டனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது.

வன்னி - மருதமடு முன்னரங்க நிலைகள் மீது நேற்றுக் காலை புலிகள் தாக்குதல் நடத்தினர் எனவும் -

படையினர் மேற்கொண்ட பதில்தாக்குதலின்போது பெண்புலிகள் இருவர் உயிரிழந்தனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.முகாவில் பகுதியில் புலிகள் நேற்றுமுன்தினம் மாலை நடத்திய மோட்டார்த்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## புலிகளின் பிஸ்ரல் குழுவுக்கு இராணுவச் சிப்பாய் பலி!

### பதில் தாக்குதலில் சிறுவன் உயிரிழப்பு!!

மட்டக்களப்பு,ஜன.24

மட்டக்களப்பு மொறக்கொட்டாஞ் சேனைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழுவினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார். மற்றுமொரு சிப்பாய் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டின்போது அதே இடத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் ஒருவன் பலியானதுடன் மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர். மொறக்கொட்டாஞ் சேனை இராணுவமுகாமிலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள உள் வீதியொன்றில் நேற்று மாலை 3.30 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் மேற்படி இராணுவ முகாமில் கடமையாற்றிய எஸ்.வன்னிநாயக்கா என்ற சிப்பாயே கொல்லப்பட்டவர் ஆவார். இத்துப்பாக்கிச் சூட்டினைத்தொடர்ந்து முகாமிலிருந்து சுமார் அரைமணித்தியாலம் வரை சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் கே.விஜயேந்திரன் என்ற சிறுவன் கொல்லப்பட்டதுடன் எஸ்.புஸ்பலதா (வயது10),கே.சண்முகராசா(வயது22), ரி.பாக்கியராசா(வயது18) ஆகியோர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தின் பின்னர் நேற்று மாலைவரை இப்பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டது எனவும் -

பின்னர் 7.30 மணி தொடக்கம் வழமைநிலை அங்கு ஏற்பட்டதாக பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (இ-5)

# அரசின் தீர்வு யோசனை
# நோர்வே மூலம் புலிகளிடம்!

## அமைச்சர் பீரிஸ் தகவல்

கொழும்பு,ஜனவரி24

**இனப்பிரச்சினை தொடர்பான அரசின் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் நோர்வே அரசு மூலம் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்படும் என்று நீதி, அரசமைப்பு இன விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தீர்வுத்திட்டத்தை மூன்று மாத காலத்துக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது என்றும் -

அதற்கு முன்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும் ஐ.தே.க.வுடனும் பேச்சு நடத்தி அவைகளின் ஒப்புதலை இதற்குப் பெறுவது என்றும் ஜனாதிபதி தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது தெரிந்ததே.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் பீரிஸ் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

தீர்வு யோசனைகள் குறித்து இன்று தொடக்கம் (திங்கள்) ஒரு வாரகாலத்துக்கு பொ.ஐ.மு.வில் அங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



தீர்வு ஒண்டு கிட்டினாலும் சுற்றிவளைப்பு நிக்காது போல....!

### கிபிர் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம்,ஜன.24

தனங்களப்பு, அறுகுவெளிப் பகுதியில் நேற்றுக்காலை 10மணியளவில் கிபிர் விமானத்திலிருந்து குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது

மூன்று குண்டுகள் தொடர்ந்து வீசப்பட்டன. இந்தத் தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிவரம் பற்றி எதுவும் தெரியவரவில்லை. (இ-5-30-139-173)

### ஆட்சேபனை தெரிவிப்பு

தென்மராட்சி,ஜன.24

ஷெல் தாக்குதல் நடத்துவதற்கு தமது பகுதி பயன்படுத்தப்படுவதை ஆட்சேபித்து பளை, முல்லையடி மக்கள் கடந்த வெள்ளிக்கிழமை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் பளைப்பிரிவு படை அதிகாரியுடன் நடத்திய பேச்சில் தமது பகுதியில் பீரங்கி பொருத்தப்பட்டு ஷெல் வீச்சு நடத்தப்படுவதால் தமக்கு ஏற்படும் அசௌகரியங்களை இவர்கள் விளக்கியதாகத் தெரியவருகிறது. (இ-117)

ஆனையிறவில்

## மீண்டும் பாரிய தாக்குதலுக்கு புலிகள் தயாராகின்றனர்

### பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவிப்பு

ஆனையிறவுப்பகுதியில் மீண்டும் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப்புலிகள் தயாராகி வருகின்றனர் என பாதுகாப்பு ஆய்வாளர்களை ஆதாரம்காட்டி பி.பி.ஸி நேற்றிரவு செய்திவெளியிட்டது.

ஆனையிறவுப்பகுதியில் கடந்த சில நாள்களாக அமைதியான சூழல் ஒன்று நிலவி வருவதாகவும் -

புலிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளும் பயிற்சிகள் காரணமாக தாக்குதல்கள் தீவிரமடையும் சூழ்நிலை காணப்படுவதாகவும் பி.பி.ஸி. தெரிவித்தது.

இதேவேளை வன்னிப்பகுதியிலும் - ஆனையிறவுப் பகுதியிலும் கடந்த ஒருமாத காலமாக நடைபெற்ற மோதல் சம்பவங்களில் படையினர் தரப்பில் 220 பேர் உயிரிழந்தனர் எனவும் -

புலிகள் தரப்பில் 250 பேர் உயிரிழந்தனர் எனவும் -

அந்தச்செய்தி மேலும் தெரிவித்தது. (இ-7)

## அரியாலை, கொய்யாத்தோட்டம் பகுதிகளில் நேற்று ஷெல்வீச்சு!

### இருவர் காயமடைந்து வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம்,ஜன.24

நேற்றிரவு அரியாலை மற்றும் கொய்யாத்தோட்டம் பகுதிகளில் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் இருவர் காயமடைந்தனர்.

அரியாலை - தபால்கட்டைச் சந்திக்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் மீது நேற்றிரவு 7.30 மணியளவில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் நான்கு பிள்ளைகளின் தந்தையான கந்தையா குணசேகரம் (வயது45) என்பவர் வயிற்றுப்பகுதியிலும் இடது காலிலும் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவரது இடதுகாலில் ஏற்பட்ட பலத்த காயத்தை அடுத்து அவரது கால் நேற்றிரவு அகற்றப்பட்டது என பிந்திக்கிடைத்த ஆஸ்பத்திரி வட்டாரச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை நேற்றிரவு 7.45

(12 ஆம் பக்கம் பார்க்க)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான

## முதலாவது சந்தேக நபர் நேற்று இங்கு ஆஜர்!

யாழ்ப்பாணம்,ஜன.24

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர் முதல் தடவையாக யாழ்.நீதிவான் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

24-11-99 இல் யாழ்.ஆரியகுளம் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் சூட்டுக்காயத்துடன் கைதுசெய்யப்பட்ட அந்தோனிப்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் என்பவரே நேற்று ஆஜர் செய்யப்பட்டவர் ஆவார். யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா சந்தேக நபரை ஏப்ரல் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் கைது செய்யப்படுபவர்கள் யாழ்ப்பாணத்திலேயே ஆஜர் செய்யப்படவேண்டும் என்று பொலீஸ் மா அதிபருக்கு சட்டமா அதிபர்பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன் பிரகாரமே முதலாவது சந்தேகநபர் நேற்று ஆஜர்செய்யப்பட்டார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்தில் கைதானோர் இதுவரை அனுராதபுரம் நீதிமன்றத்திலேயே ஆஜர்செய்யப்பட்டு வந்தனர். (இ)

# தமிழர்கள் கைதுசெய்யப்படுவதற்கு தமிழ்க்கட்சிகள் பலத்த கண்டனம்

கொழும்பு,ஜன.24

கொழும்பில் திடீர் திடீரென ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டு வகைதொகையின்றித் தமிழர்கள் கைது செய்யப்படுவதற்கு தமிழ்க் கட்சிகள் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

தமிழர் விடுதலைக்கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலைக்கழகம் ஆகியவையே தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாக கொழும்பிலுள்ள தமிழர்களை சந்தேகித்து அடிக்கடி கைது செய்வதும் தடுத்துவைப்பதும் கண்டிக்கப்பட வேண்டியதே என்று தமிழர் விடுதலைக்கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இத்தகையநடவடிக்கைகள்தொடரும் பட்சத்தில் அதற்கெதிராகப் போராட்டம்நடத்தவேண்டியநிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

தமிழர்கள் மீதான இத்தகைய துன்புறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

தமிழர் கைது தொடர்பாக ஜனாதிபதிக்கு பக்ஸ் ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

தமிழ் மக்களின் நலனில் அக்கறை காட்டப்படும் என்று அரசு பேச்சோடு மாத்திரம் நிற்காமல் செயலிலும் காட்டவேண்டும் என்று அவர் கருத்து வெளியிட்டார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். யாழ். பிராந்திய செயலாளர் எஸ்.மோகன்இது தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில், பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழர்கள் துன்புறுத்தப்பட்டு வருகிறார்கள். பொதுமக்களைப் பாதிக்கும் விதத்தில் இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடரக்கூடாது என்று கூறினார்.

"பாதுகாப்பு என்ற பெயரில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதற்கு எமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று தமிழீழ விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

### ரெலோவின் அறிக்கை

இது தொடர்பாக ரெலோ விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

இறைவனடி சேர்ந்த
அருட்தந்தை
**ஜே. அருமைநாயகம்** அடிகளார்க்கு
எமது செபமும் கண்ணீர் அஞ்சலியும்.
''பரம தந்தை எனக்குத் தருவதெல்லாம்
என்னிடம் வந்து சேரும்''

**பங்குத் தந்தையும் பங்கு மக்களும்
புனித அந்தோனியார் ஆலயம்,
பாசையூர், யாழ்ப்பாணம்.**
(73003)

# 4ஆம் ஆண்டு நீங்கா நினைவு

மண்ணில் 10 — 06 — 1918



விண்ணில் 23 — 01 — 1996

## அமரர் சுவாம்பிள்ளை நல்லதம்பி
(கரம்பொன், ஊர்காவற்றுறை)

நல்ல பண்பையும் அன்பையும் எமக்கு ஈந்தீரே!
நாடு போற்ற நல்லோராய் வாழ வழிசமைத்தீரே!
நாலாண்டு கரைந்தது அப்பா!
நம்மோடு இனி எப்போது மீண்டும் சேர்வீர்கள்!

உங்கள் ஆத்மசாந்தி வேண்டி முப்போதும் இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் கலங்கும்
**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல. 110/2, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/10776)

# மரண அறிவித்தல்கள்

## Rev. Fr. E. J. Arumainayagam
## அருள்தந்தை E. J. அருமைநாயகம்

யாழ். ஆயரின் செயலாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அருள்தந்தை E. J. அருமைநாயகம் அவர்கள் ஞாயிறு காலை 8.20 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (24-1-2000) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறும்.

தகவல்:
Fr. J. P. E. செல்வராஜா
(யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர்)

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.
(72995)

## கோவிந்தர் கந்தசாமி

மாரீசன்கூடல் இளவாலையைச் சேர்ந்த கோவிந்தர் கந்தசாமி 21 - 01 - 2000 வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

இவர் தனபாக்கியத்தின் அன்புக் கணவரும், நாகமலர், கோமளவாசகம், கோவிந்தராசன் (காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்), வரதராசன் (சுவிஸ்), தருமராசன் (சுவிஸ்), லதா (ஜேர்மனி), தருமதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நடராசா, தனரத்தினம், கோணேஸ்வரி (ப. நோ. கூ. சங்கம், கைதடி), வதனா (சுவிஸ்), செல்வநேசன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், நந்தகுமார் (லண்டன்), வசந்தி, ரட்ணகுமார் (லண்டன்), சந்திரா (லண்டன்), கற்பகா, கஜேந்திரன், நியேந்திரன், பிவேந்திரன், அமுதலோஜினி, அனுசன், அபிசாலினி, ஆனந்த், காலஞ்சென்ற தவக்குமார், பவித்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும், கஜானாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24 - 01 - 2000 திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை குடும்ப மயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
**கோவிந்தராசன்**
(மகன்)

மாரீசன்கூடல்,
இளவாலை.
(73005)

# சேவைக்கால பயிற்சி கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு, ஜன. 24

உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து சிறுவர் பாடசாலை (முன்பள்ளி) ஆசிரியர்களுக்குமான சேவைக் கால பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலபாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவநேயன் அறிவித்துள்ளார்.

(இ-152)

# பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம்

நாவற்குழி, ஜன. 24

யுத்த நிலைமையினாலும் இடம் பெயர்வாலும் பாதிப்புற்ற தனங்களப்பு, மறவன் புலோ, கோவிலாக்கண்டி ஆகிய கிராம விவசாயிகள் ஒன்று கூடி பாதிக்கப்பட்ட விவசாயிகள் சங்கம் எனும்ஓர் அமைப்பினை உருவாக்கியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்தச் சங்கத்தின் தலைவராக வே, இராசரத்தினமும், செயலாளராக சி. சிதம்பரப் பிள்ளையும் பொருளாளராக வே. செல்ராசாவும். தெரிவு செய்யப்பட்டானர். இவர்களுடன் உபதலைவர்,உப செயலாளர் உட்பட ஆறு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (கு-102)

**2000 A/L**
**வணிகக்கல்வி**
PAPER CLASS
யாழ். ஆசிரியர்
முரளி
**ஆரம்பம்:**
**25-01-2000**
மு.ப. 6-15 — 7-15 வரை
**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி.
(72998)

**லிபேட்டி** அச்சுவேலி
விஜய காந்த், மீனா
நடித்த
**வானத்தை போல**
காட்சிகள்: 10.30, 2.30
T. P. 070-212223
070-212678
[10778)

**ராஜா**
யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
**அவள் வருவாளா**
10.30, 2.30
[சி/10743]

**நாகம்ஸ்**
சுன்னாகம்
சரத்குமார்
தேவயாணியின்
**O சூரியவம்சம்**
(ரீல்ஸ்)
(புதிய நேரம்)
[72969]

**YOGI HOME SCIENCE ACADEMY**

குறுகிய கால புதிய வகுப்புக்கள் 4-2-2000
அன்று ஆரம்பமாக உள்ளன.

1) அடிப்படை ஒப்பனையும் நவீன முறையிலான தலை அலங்காரங்களும் (Make-up and Hair Dressing) 15 வகுப்புக்கள் மட்டும். இதில் பாடக்குறிப்புக்களுடன் கூடிய செய்முறை விளக்கங்களுடன் வித்தியாசமாக சாறி கட்டும் முறைகளும் விளக்கப்படும்.
2) துணியில் வர்ண அலங்கரிப்பு (Fabric Painting) (7 வகுப்புக்கள் மட்டும்)

மற்றும் ஏனைய மனையியல் வகுப்புக்களும்,தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
(72965)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி தம்பிஜயா

திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப்பிள்ளையார் ஆலய பிரதம குரு கந்தபுராண வித்தகர், பௌராணிக தேசிகர் சின்னத்தம்பி தம்பிஜயா நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் புவனேஸ்வரியின் பாசமிகு தந்தையும் கனகசபாபதியின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (24-1-2000) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**பேரன்**

பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
(சி/10780)

## முருகேசு கனகரட்ணம்
(ஆச்சாரி)

மானிப்பாய் காளிகோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட முருகேசு கனகரட்ணம் (ஆச்சாரி) நேற்று 23-01-2000 காலமாகிவிட்டார்.

இவர் தங்கரட்ணத்தின் அன்புக் கணவரும் அமிர்தலிங்கம், காலஞ்சென்ற கமலாதேவி, நிர்மலா தேவி ஆகியோரின் அருமைத்தகப்பனாரும் நிர்மலா தேவி, சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24-01-2000) திங்கள்பிற்பகல் 2.00 மணிக்கு பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
**மனைவி, பிள்ளைகள்.**

காளி கோயிலடி
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.
(73006)

## எல்லுப்போலை அப்புத்துரை
(முன்னாள் உறுப்பினர், உடுவில் கிராமசபை).

சூளானை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எல்லுப்போலை அப்புத்துரை 23-01-2000 அன்று காலை 9-30 மணியளவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற எல்லுப்போலை- செல்லம் தம்பதிகளின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்ற செல்லமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னுப்பிள்ளை, பாக்கியம், பசுபதி, தங்கமுத்து, செல்லத்துரை (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் தனலட்சுமி, செல்லச்சாமி (சந்தை மேற்பார்வையாளர், பட்டின சபை, சுன்னாகம்), தங்கவேல் (சவூதிஅரேபியா), வடிவேல் (கனடா), கதிரவேல் (லண்டன்), செல்வநாயகி ராமச்சந்திரன், ஸ்ரீகாந்தமலர் குகநாதன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் கனகசபை (ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்), தர்மலிங்கம் (கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சண்முகநாதன், கந்தையா ராமச்சந்திரன் (யாழ். மாநகர சபை), கனகரட்ணம் குகநாதன் (லண்டன்), பூமணி, காலஞ்சென்ற விசாலாட்சி, கோமதி, இந்துமதி, ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சோபனா, மனோகரசிவம்,குமரேசுவரன், கோகுலன், ராகுலன், பராகுலன், சோமாஜினி, நரேஸ், சமினா, நிராஜினி, நிரோஜன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24-1-2000) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ராமச்சந்திரன், அ. செல்லச்சாமி
(மருமகன்) (மகன்)

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(72299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் வசிப்போரின் விவரம் படையினரால் பதிவு

## வீடு வீடாக படிவங்கள் விநியோகம்

வ்வுனியா, ஜனவரி 24

**வவுனியா மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்போரினதும் வந்து தங்கிச் செல்வோரினதும் பூரண விவரங்கள் படையினரால் சேகரிக்கப்பட உள்ளன. இதற்காக வீடு வீடாக படிவங்கள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன.**

வெளியிடங்களில் இருந்து வவுனியாவுக்கு வந்து தங்குவோரும் தமது பெயரை படையினரிடம் பதிவு செய்ய வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் வீடு வீடாகச் சென்று படையினர் இந்தப் பதிவு தொடர்பான விண்ணப்பப் படிவங்களை வழங்கி வருகின்றனர்.

இந்த விண்ணப்பத்தில் குடியிருப்பாளரின் பெயர், வயது, தொழில், தொழில் செய்யும் இடம், தங்கியிருப்போர் விவரம் போன்றவற்றுடன் குறிப்பிடப்பட்ட குடியிருப்பாளரின் குடும்பம் இடம்பெயர்ந்து வந்திருந்தால்இடம்பெயர்ந்த இடம், திகதி என்பனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்திலோ அல்லது தமிழ்க்கட்சிகளிலோ குடும்ப உறுப்பினர்கள் அங்கத்தவர்களாக இருந்தால் அதன் விவரம் போன்றவை உட்படப் பல விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

இந்த விண்ணப்பத்தை பூர்த்தி செய்து வவுனியா பூந்தோட்டத்திற்குச் செல்லும் வழியிலுள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஜ-5-164)

## மகாபொல பரிசில்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன. 24

மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பதில் துணைவேந்தரும் கலைப் பீடாதிபதியுமான பேராசிரியர் செ. பாலச்சந்திரனும் கலந்து கொண்டார்.

426 மாணவர்களுக்குப் புலமைப் பரிசிலுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(ஜ-5-10)

### நிலைமை சீரடையும் வரை

# மீனவர் குடும்பங்களுக்கு மாதாந்த நிதி உதவி தருக

## கடற்றொழிலாளர் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஜன. 24

கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்லும்வரை அவர்களது குடும்பச் செலவுக்காக ஒரு குறிப்பிட்ட தொகையை நிதி உதவியாக வழங்குமாறுகேட்டுபாஷையூர் புனித அந்தோனியார் கடற்றொழில் சங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நேற்றுமுன்தினம் மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

யாழ். கரையோரப் பகுதிகளில் தொடர்ந்து கொண்டிருக்கும் போர் நிலைமை காரணமாக ஒரு மாதத்துக்கு மேலாக தொழில் புரிய அனுமதியின்றி கஷ்டத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டிருக்கும் பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர் ஆகிய மூன்று கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் கடற்றொழிலாளர் குடும்பங்களின் நிலை பற்றி நீங்கள் அறியாமலிருக்க முடியாது.

கடலில் அழிந்து கொண்டிருக்கும் எமது வருவாயின் ஆதாரமாகிய தொழில் உபகரணங்களை காப்படுத்துவதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கி தொடர்ந்து எமது பகுதியில் எவ்வித அழுத்தங்களும் இல்லாமல் தொழில் செய்ய வழிசமைத்துத்தருவதுடன் அழிந்த எமது தொழில் உபகரண முதலீட்டினை சீர் செய்வதற்கு நஷ்டஈட்டுடன் மானிய அடிப்படையிலோ, கடன் அடிப்படையிலோ உதவுமாறும் வேண்டுகிறோம் — என்று அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## யாழ். கூட்டுறவுச் சங்கத்துக்கு புதிய களஞ்சியக் கட்டடம்

### வெள்ளியன்று அடிக்கல் நடுகை

அரியாலை, ஜன. 24

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல லட்சம் ரூபா செலவில்—நவீன வசதிகளைக் கொண்ட—களஞ்சியம் ஒன்றை அமைக்கவுள்ளது.

சமய நிகழ்ச்சிகளுக்கு மத்தியில் சங்கத் தலைவர் சீ வீ. கே. சிவஞானம் இதற்கான அடிக்கல்லைக் கடந்த வெள்ளிக்கிழமை நட்டு வைத்தார்.

சங்கத்தின் உபதலைவர் பெஞ்சமின் யேக்கப் இயக்குநர்களான கே. யோகரத்தினம், வே. குணநாயகம், களஞ்சியப் பொறுப்பாளர் சி. திருநாவுக்கரசு உட்பட சங்கப் பணியாளர்கள் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர்.

சுமார் 90 அடி நீளமும் 47 அடி அகலமும் கொண்ட — நவீன வசதிகள் அடங்கிய — இந்தக் களஞ்சியக் கட்டடம் சங்கத்தின் கே. கே. எஸ். வீதியில் அமைந்திருக்கும் நடுவப் பணிமனையின் பின்புறமாக உள்ள காணியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

தற்போது சங்கத்தின் களஞ்சியம் கைலாசபிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமாகவுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-17)

## சங்கக் கிளைகள் மீண்டும் திறப்பு

நாவற்குழி, ஜன. 24

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி, நாவற்குழி, கோயிலாக்கண்டி, தச்சன்தோப்பு ஆகிய கிளை நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

(க-102)

### கூட்டுறவுப் பணியாளர்களுக்கு

## சம்பள உயர்வு வழங்குதல்; அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு

அரியாலை, ஜன. 24

கூட்டுறவுப் பணியாளர்களுக்குப் புதிய சுற்றறிக்கையின்படி சம்பள உயர்வை அமுல்படுத்துவது தொடர்பான அறிக்கைகளை உடனடியாகச் சமர்ப்பிக்குமாறு சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ். கே. சண்முகநாதன் கேட்டுள்ளார்.

வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவுப் பணியாளர் ஆணைக் குழுவால் தயாரிக்கப்பட்ட கூட்டுறவுப் பணியாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான சுற்றறிக்கையை கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது ஆராய்ந்து வருகின்றன.

புதிய சம்பள உயர்வுச் சுற்றறிக்கையை அமுல்படுத்துவது மற்றும் இந்தச் சுற்றறிக்கையை அமுல்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்றவற்றையே அறிக்கையாக விரைவில் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

[ஐ—17]

## றோட்டறக்ட் பதவியேற்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ்ப்பாணம் நகர் மைய றோட்டறக்ட் கழகத்தின் பதவியேற்பு வைபவம். ஆரம்ப தினவிழா 'அச்சாணி' எனும் கழக நூலின்வெளியீடு என்பன இன்றுதிங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கழக மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சகல றோட்டறி, றோட்டறக்ட், இன்டறக்ட் கழக உறுப்பினர்களைக் கலந்துகொள்ளுமாறு றோட்டறக்ட் கழகத் தலைவர் கேட்டுள்ளார்.

(க)

## மருத்துவ பீடத்துக்கு உடல்களை தானம் செய்யுமாறு கோரிக்கை

யாழ். மருத்துவபீட உடற்கூற்றியல் துறையில் மாணவர்களின் கற்றலுக்குத் தேவையான உடல்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

இறந்தவர்களின் உடல்களை மருத்துவ பீடத்துக்கு தானமாக வழங்குமாறு மருத்துவபீட மாணவர் ஒன்றியம் பொது வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அண்மையில் சாவகச்சேரிப் பகுதியில் இறந்த ஒருவருடைய உடல் — அவரது விருப்பப்படி—மருத்துவ பீடத்துக்கு வழங்கப்பட்டது.

தனது உடலைத் தானம் செய்த அவரது செயலைப் பெருமையுடன் பாராட்டுவதாகவும் —

அதேவேளை அந்த உடலைக் கையளித்த சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரிக்கும், இறந்தவரின் உறவினர்களுக்கும் நன்றி கூறுவதாகவும் —

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## புவியியற்கழகக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். பல்கலைக்கழக புவியியற் கழகம் நடத்தும் இவ்வருடத்தின் முதலாவது கருத்தரங்குத் தொடர் நாளைமறுதினம் புதன்கிழமை மாலை 3 மணிக்குபுவியியற்றுறைமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் 'சமூகச் சூழல்' என்னும் தலைப்பில் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் உரையாற்றவுள்ளார்.

(ஐ-5)

## குரங்குகள் அட்டகாசம்

அரியாலை, ஜன. 24

கொழும்புத்துறை கிழக்கு ஆனந்தன் வடலிப் பகுதி, நெடுங் குளம் போன்ற இடங்களில் குரங்குகள் தென்னை மரங்களில் குரும்பைகளைச் சேதப்படுத்தி வருகின்றன.

ஷெல் தாக்குதல்களை அடுத்து தென்மராட்சி, கைதடி, நாவற்குழிப் பகுதிகளில் இருந்து குரங்குகள் இப்பகுதிக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

(ஜ-17-30)

# தொலைபேசியில் எனது கணவருடன் அடிக்கடி சிங்களத்தில் பேசியோர் மீதே சந்தேகம்

## குமாரின் கொலை விசாரணையில் மனைவி சாட்சியம்

கொழும்பு, ஜன. 24

எனது கணவர் கொலை செய்யப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன் அவரது நடவடிக்கைகளில் சில மாற்றங்கள் தென்பட்டன.

இவ்வாறு குமார் பொன்னம்பலத்தின் மனைவி தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கல்கிசை நீதி மன்றத்தில் இடம்பெற்ற குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பான விசாரணையில் சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்கிசை நீதிமன்ற நீதிபதி ஆர். ரி. சுமதி பாலா முன்னிலையில் நடைபெற்ற இந்த விசாரணையில் அவர் மேலும் கூறியதாவது:-

தமக்குத் தெரியா[illegible] அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்வதாகவும் இரண்டாயிரம் ஆண்டு முடியும் வரை நான் உயிரோடு இருப்பேனோ தெரியாது — என்னை வாழவிடமாட்டார்கள் போல் உள்ளது — என்று அவர் என்னிடம் கூறியிருந்தார்.

இந்தக் கொலை தொடர்பாக சாந்த என்பவர் மீது தான் எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அவரது தொலைபேசி அழைப்பு பலவற்றுக்கு நான் பதிலளித்து இருக்கின்றேன், அவர் தொலைபேசி எடுத்தவுடன் 'மாத்தையா இன்னவத' என்று கேட்பார். ஏதாவது சொல்ல வேண்டுமா என்று கேட்டால் [illegible] அவர் முழுச் சிங்களத்தில் உரையாடுவார்.

கடந்த இரண்டு மாதங்களாக சாந்த தொலைபேசியில் தொடர்ந்து உரையாடுவார். எனக்கு சாந்த மீது தான் சந்தேகம். இவரைத் தவிர சஞ்சீவன், மகேசன் ஆகிய இருவரும் என்னுடன் தொலைபேசியில் உரையாடுவார்கள். இவர்கள் அனைவரும் சிங்களத்திலே கதைப்பார்கள். ஏனென்று கேட்டால் வழக்கு விடயமாக பேச வேண்டும் என்று சொல்வார்கள்.

இவர்களின் தொலைபேசி அழைப்பு பற்றி அடிக்கடி கணவரிடம் கேட்பேன். அவர்கள் வழக்கு சம்பந்தமாக பேசுவார்கள் என்பார். அவன் யார் உங்களின் கூட்டாளி என்று சொல்கிறான் என்று கேட்டால் ''அறிவில்லாதவன் அப்படித்தான் பேசுவான்'' என்று எனது கணவர் சொல்வார். — இப்படி அவர் தெரிவித்தார்.

குமார் பொன்னம்பலத்தின் வீட்டு வேலையாளான சிவா என்பவரும் சாட்சியமளித்தார்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்த ஆரம்ப விசாரணையை சட்டத்தரணிகள் கிரிபண்டா, தயா பெரேரா ஆகியோர் நெறிப்படுத்தினர்.

ஆரம்ப விசாரணையின் போது குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திரகுமாரும் உடனிருந்தார்.

(ஜ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிட்டை எழுதுநர் தேவை

உடைகளுக்குச் சிட்டை எழுதி சரிபார்த்து கொடுப்பதற்கு **சிட்டை எழுதுநர் தேவை**
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உடன் தொடர்பு கொள்ளவும்.

**நாதன் சலவைத் தொழிலகம்**
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
(72957)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 15 — 04 — 1920

உதிர்வு: 25 — 12 — 1999

அமரர்
### வைத்திலிங்கம் இரத்தினசபாபதி
(வன பரிபாலன சபை அதிகாரி)

25-12-1999 அன்று சிவபதமடைந்த எமது தந்தையின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இன்று (24-01-2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

85, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(72955

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 1938 — 04 — 10

மறைவு 1999 — 12 — 26

### திருமதி காந்திமதி கணபதிப்பிள்ளை

எங்கள் குலவிளக்காய்
குடும்ப தெய்வமாய்
அன்பின் திருவுருவாய்
வாழ்ந்து எங்களுக்கெல்லாம்
நல்வழி காட்டி வளம்பெற
உதவிய பண்பிற்கோர்
இலக்கணமாய் நேசமாய்
நெஞ்சிருத்தி எம்மை வாழ்வித்தீர்
பல நாள்கள் கழிந்தாலும்
உங்களின் நேசச் சுடரொளி
எமது உள்ளமெல்லாம் பிரகாசித்திடும்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25-01-2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

— குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:
கொத்தியகாடு,
தொண்டைமானாறு.

தற்போதைய முகவரி:
வீரபத்திரர் கோயிலடி,
உடுப்பிட்டி.
(72867)

# ரணிலின் அறிவிப்புக்கு பெருமாள் வரவேற்பு

கொழும்பு, ஜன. 24

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி இடைஞ்சலாக இருக்கமாட்டாது என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதை வரதராஜப் பெருமாள் வரவேற்றுள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் பெயரில் அ. வரதராஜப் பெருமாள் மற்றும் த. சுபத்திரன், தி. சிறிதரன் ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் வாக்களிக்கத் தயாரென எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க கூறியிருப்பதை நாம் வரவேற்கிறோம்.

இனப் பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்கான அடித்தளம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான பிரதான கட்டத்தை இந்த நாடு அடைந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

பாரம்பரியமாகவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் விடயத்தில் இரு துருவங்களாகச் செயற்பட்டு வந்த கட்சிகள் மத்தியில் 50வருடங்களுக்குப் பின் நம்பிக்கை தரக்கூடிய இத்தகைய தொரு தோற்றப்பாடு ஏற்பட்டிருக்கின்றமையானது பாராட்டுக்குரிய ஒன்றே ஆகும்.

இனிமேலும் காலம் தாமதிக்காமல் ஜனாதிபதி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தான் முன்வைத்த தீர்வுத் திட்ட யோசனைகளை உடனடியாக உரிய திருத்தங்களுடன் நாடளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

புதிய நூற்றாண்டில் கொலைகள் வன் முறைகள் மத்தியில் அரசியல் அரங்கில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றம் நம்பிகை ஏற்படுத்துவதாக அமைகிறது.

இந்த நாட்டின் பெரும்பான்மையான தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, இனங்களுக்கிடையில் சமாதானமான வாழ்வு இரண்டையுமே வலியுறுத்துகிறார்கள்.

ஜனாதிபதித் தேர்லில் சந்திரிகாவும் வாக்களித்த 42 லட்சம் மக்களும், ரணில் விக்கிரமசிங்காவுக்கு வாக்களித்த 36 லட்சம் மக்களும் வெவ்வேறு கோணங்களில் இதனைத் தான் வலியுறுத்தினார்கள் எனவே மக்களின் நம்பிக்கைகள் எதிர்பார்ப்புகள் வீண் போகாத வகையில் கால தாமத மின்றிச் செயற்படும்படி அரசின் தலைவரையும், எதிர்க்கட்சித் தலைவரையும் இந்த நாட்டு மக்களின் சார்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாப் கேட்டுக்கொள்கிறோம்.

எதிர்பார்க்கப்படும் புதிய அரசமைப்பானது நாடாமன்றத்தினால் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அதனை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் நாம் எமது பரிபூரணமான ஒத்துழைப்பை வழங்குவோம் என்பதையும் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறோம்—என்றுள்ளது.

## தபால் ஊழியருக்கு முற்பணம்

யாழ்ப்பாணம் ஜன 24

தபால் திணைக்களத்தில் பணிபுரியும் சகல நிரந்தர ஊழியர்களுக்கும் புத்தாயிரமாம் ஆண்டுக்கான ஆயிரம் ரூபா விசேட முற்பணம் விரைவில் வழங்கப்படவுள்ளது.

கடந்த 80 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்பு வங்கிகள் மூலம் வழங்கப்பட்டு வந்த இந்தப் பணம் தற்பொழுது தபால் திணைக்களத்தின் யாழ், பிரதேச கணக்காளர் அலுவலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

வழங்கப்படவுள்ள முற்பணம் சம்பளத்திலிருந்து நூறு ரூபா வீதம் பத்துத்தவணைகளில் மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என தபால் திணைக்கள அதி[illegible] தெரிவித்தார். (இ-10)

புத்தாயிரம் ஆண்டில்
## குறிஞ்சி ரேடர்ஸ் நிறுவனத்தின் விசேட சலுகை

பஜாஜ் தயாரிப்புக்களான
4S சம்பியன், ஸ்கூட்டர்
Classic SL Model KB125
கொள்வனவு செய்வோருக்கு
ஹெல் மெட்டும், ஜக்கற்றும்
அன்பளிப்பாக வழங்கப்படும்.

**குறிஞ்சி ரேடர்ஸ்**
நவீன சந்தை, சாவகச்சேரி.
(சி/10767)

## சீட்டிழுப்பு முடிவுகள்

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் நலன்புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்.

1ஆம் பரிசு — 2809
2ஆம் பரிசு — 0901
3ஆம் பரிசு — 2595

ஆறுதல் பரிசு — 1554, 2287, 2089, 3562, 0871.

மேற்படி பரிசில்களை 31-01-2000க்கு முன்னர் காரியாலய நாள்களில் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்

- நிர்வாகிகள்
(சி/10766)

## வரவேற்கின்றோம்

வடபிராந்திய உதவி மதுவரி ஆணையாளராக
இடமாற்றம் பெற்று
கடமையைப் பொறுப்பேற்றிருக்கும்
எமது பெருமதிப்புக்குரிய

### திரு. வி. என். சிறிகாந்தா

அவர்கள்
**உதவி மதுவரி ஆணையாளர்**
வடபிராந்தியம் - 1
வருக வருக என வரவேற்பதில்
பெருமகிழ்வடைகின்றோம்.

**வடபிராந்திய மதுவரிப் பரிசோதகர் சங்கம்,**
தலைமைக் காரியாலயம்,
மதுவரி நிலையம்,
பருத்தித்துறை.
(72973)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சகமாணவன் செல்வச்சந்திரனின்
தந்தையாராகிய
### சபாபதிப்பிள்ளை செல்வரத்தினம்

அவர்கள் 25-12-1999 அன்று இறைவனடி சேர்ந்ததையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு பிரிவுத் துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சித்திரமும் வடிவமைப்பும், கலைப்பீடம்,**
**(1 ஆம் வருட மாணவர்கள்)**
**யாழ். பல்கலைக்கழகம்.**
(72909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு

## வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் உள்ளூராட்சி திணைக்கள

# ஆய்வு உத்தியோகத்தர் பதவிக்கு

# ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை-2000

வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள ஆய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு கிழ்க்குறிப்பிட்ட தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

**இறுதித் திகதி 2000 - 02 - 25 ஆகும்.**

02. இப்பதவிக்குரிய வெற்றிடங்களின். எண்ணிக்கை அண்ணளவாக 10 ஆகும். இவ்வெற்றிடங்கள் போட்டிப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் நிரப்பப்படும். மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை மேற்கூறப்பட்டவாறு இருந்த போதிலும் சேவையின் தேவையைப் பொறுத்து வெற்றிடங்களின் எண்ணிக்கை குறைவதற்கோ அல்லது கூடுவதற்கோ இடமுண்டு. எவ்வாறாயினும் நிரப்பப்படும். வெற்றிட எண்ணிக்கை தொடர்பான இறுதித்தீர்மானம் வடக்கு — கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

### 03. சேவைக்கான நிபந்தனைகள்:

1. இப்பதவி நிரந்தரமானதும் ஒய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் பெற்றவர்கள் விதவைகள் / அநாதைகள்/தபுதாரர் அநாதை ஓய்வூதிய திட்டத்துக்கு உதவித்தொகை செலுத்துமாறு வேண்டப்படுவார்கள்.
2. இது ஓர் இடமாற்றச் சேவையாகும். சகல அலுவலர்களும் வடக்கு — கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்ற கடமைப்பட்டவர்களாவர்.

### 04. சம்பள அளவுத் திட்டம்

ரூபா 69,480 12X1560 - 3X1800 - 93,600 (T.2.5)
பொது நிர்வாக சுற்றறிக்கை 2/97 (iii) இன்படி

### 05. தகைமைகள்:

அ. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

இ. விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில், மாகாண சேவையில் இருப்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

ஈ வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் வேண்டும். அதாவது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னுள்ள ஆறு ஆண்டுகாலப் பகுதியில் ஆகக் குறைந்தது மூன்று ஆண்டுகளாவது வடக்கு — கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது இவற்றை நிரூபித்தல் வேண்டும்.

1. வாக்காளர் இடாப்பின் பிரதி
2. கிராம சேவை உத்தியோகத்தரிடம் பெற்ற வதிவிடச் சான்றிதழ்.

குறிப்பு: வடக்கு — கிழக்கு மாகாணத்தினை நிரந்தர பிறப்பிடமாகவோ அல்லது வதிவிடமாகவோ கொண்டிருந்து வடக்கு—கிழக்கு மாகாணத்தில்தற்போதுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து வேறு மாகாணங்களில் தற்காலிமாக வசிப்போரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் தற்போதைய தற்காலிக வதிவிடத்தை நிரந்தர வதிவிடமாகக் காட்டி வேறு பதவிகளுக்கு விண்ணப்பித்திருத்தல் கூடாது. இதனை அத்தாட்சிப்படுத்தும் ஆவணமும், இடம்பெயர்ந்து தற்காலிகமாக வசிப்பதை உறுதிப்படுத்தும் ஆவணமும் நேர்முகப்பரீட்சையின்போதுசமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

### உ. கல்வித் தகைமைகள்:

I) க. பொ. த. (சா/த) அல்லது அதற்குச் சமமான ஒரு பரீட்சையில் தமிழ் மொழி/தமிழ் இலக்கியம்/சிங்களமொழி/சிங்கள இலக்கியம் ஆகியவற்றுள் ஒரு திறமைச் சித்தியுடனும், எண் கணிதம் / ஆரம்ப கணிதம் / தூய கணிதம் / வர்த்தக கணிதம் ஆகியவற்றுள் ஒரு திறமைச் சித்தியுடனும் வேறு இரு பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடனும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது மொத்தம் நான்கு பாடங்களில் திறமைச் சித்தி பெற்று, ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இதில் ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தி பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன்

II) பின்வரும் தகைமைகளில் ஏதாவது ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

1. அரசாங்க பல்தொழில்நுட்ப கல்வி நிறுவனமொன்றில் கணக்கியல் அல்லது வர்த்தக பாடங்களுக்கான உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறியின் இரண்டாவது வருடப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் அல்லது கணக்கியல் அல்லது வர்த்தகத்தில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்.
2. இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியில் அல்லது அரசாங்க பல்தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஒன்றில் வணிகவியல் கல்வியில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட தேசிய டிப்ளோமா சான்றிதழ்.
3. நிர்வாகக் கணக்கியல் நிறுவனத்தின் (லண்டன்) இறுதிப் பரீட்சையில் சித்தி.
4. இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தில் ஆரம்ப பரீட்சையில் சித்தி.

அத்துடன்

III) அரசாங்கத் திணைக்களம் / அரச கூட்டுத்தாபனம் / சட்டபூர்வமான நிறுவனம் / பாரியதனியார் நிறுவனம் ஆகியவற்றில் ஒன்றில் கணக்குப்பதிதல், உள்ளகக்கணக்காய்வு, கணக்கியல் அல்லதுஆய்வில் 10 வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

குறிப்பு: விண்ணப்ப முடிவு திகதிக்கு முன் உரிய பரீட்சையின் பெறுபேறுகள் உத்தியோக பூர்வமாக வெளியி[illegible] பெறுபேறுகளை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நேர்முகப்பரீட்சையில் நிராகரிக்கப்படும்.

### 06. ஆள் சேர்ப்பு முறை

எழுத்துப் பரீட்சை பெறுபேற்றின் திறமை அடிப்படையிலும் அரசாங்க தாபன கோவை விதிகள், அங்கிகரிக்கப்பட்ட ஆள் சேர்ப்புத் திட்டம், அரச சுற்று நிருபங்கள் ஆகியவற்றுக்கு இணங்கவும் ஆள் சேர்ப்புச் செய்யப்படுவர்.

### 07. எழுத்துப் பரீட்சை

எழுத்துப் பரீட்சையானது சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் நடத்தப்படும். இவ் எழுத்துப்பரீட்சை கிழ்க் குறிப்பிட்ட இரு வினாப்பத்திரங்களையுடையதாகவிருக்கும்.

1. நுண்ணறிவு — ஒரு மணித்தியாலம் — 100 புள்ளிகள்
2. கணக்கியலும் அலுவலக நடைமுறையும் — இரண்டு மணித்தியாலம் — 100 புள்ளிகள்

குறிப்பு: ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றவர்களே இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். மேலும் இப்பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் திறமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படும்.

08. நேர்முகப் பரீட்சையின் போது கோரப்பட்ட தகைமைகள் பரிசீலிக்கப்படும். இதன்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

### 09. பரீட்சைக் கட்டணம்:-

விண்ணப்பதாரி வதியும் வடக்கு — கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகம் ஒன்றில் ரூபா 200 செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் கழராதவாறு ஒட்டி இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பணம் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் 6004 இலக்க வைப்புக் கணக்கின் வரவில் சேரக்கூடியதாக பிரதேச செயலகத்தினால் கணக்கு வைக்கப்படல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் எக்காரணம் கொண்டும் செலுத்திய பரீட்சைக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வேறு மாகாணங்களுக்கு தற்காலிகமாக இடம் பெயர்ந்து உள்ளவர்கள் மட்டும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 200 இற்கான காசுக்கட்டளையை செயலாளர் 'மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு என்ற பெயருக்குப் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

### 10. விண்ணப்பிக்கும் முறை

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவங்களுக்கமைவாக ஏ4 அளவிலான (21 செ.மீ29செ.மீ,) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களை ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். இலக்கம் 1 தொடக்கம் 10 வரையுள்ள பகுதியை அதன் முதற்பக்கத்திலும் எஞ்சிய பகுதியை இரண்டாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் ஒழுங்கு செய்தல் வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை 2000-02-25 ஆம் திகதிக்கு முன் ''செயலாளர் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு] ''வடக்கு—கிழக்கு மாகாணம், இல. 35, மக்கேய்சர் வீதி, உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை — 2000'' என பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். அரசாங்க சேவையில் அல்லது மாகாண சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை திணைக்களத் தலைவரினூடாக அனுப்புதல் வேண்டும். மற்றவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தங்கள் கையொப்பங்களை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பூரணமற்றதும் உரிய தகைமைகளைக் கொண்டிராததும் குறித்த திகதிக்கு முன் கிடைக்கப் பெறாததுமான விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பதாரி ஒருவர் தகுதியற்றவரென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது நிரந்தர நியமனத்தைப் பெற்ற பின்போ எக்கட்டத்திலும் அவரின் நியமனம்இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரி ஒருவர் அளித்த விவரங்கள், சான்றிதழ்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவையாகக் காணப்படின் அல்லது அவர் ஏதேனும் முக்கிய விடயத்தை வேண்டுமென்று மறைத்திருந்தால் அவர் தெரிவிலிருந்து அல்லது சேவையில் இருந்து நீக்கப்படலாம்.

### 11. பரீட்சை நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் — 1 | கிளிநொச்சி — 4 | மட்டக்களப்பு — 7 |
| மன்னார் — 2 | முல்லைத்தீவு — 5 | அம்பாறை — 8 |
| வவுனியா — 3 | திருகோணமலை — 6 | கல்முனை — 9 |

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகரம் அண்மையான நகரத்திற்கு மாற்றப்படலாம்.

இவ்வறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத / குறிப்பிடப்படாத எவையேனும் விடயங்கள் தொடர்பாகவும் தரப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தெரிவு நியமனங்கள் தொடர்பாகவும் வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலேயே இறுதியானதும் முடிவானதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும்.

**க. பரமேஸ்வரன்,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு — கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதிரி விண்ணப்பப்படிவம்

## (5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
## வடக்கு–கிழக்கு மாகாண பொதுச்சேவையின் உள்ளூராட்சித் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2000

சுட்டெண்;

01. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர்; திரு / திருமதி / செல்வி
 1) தமிழில் / சிங்களத்தில்
 2) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

02. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள்:
 1) தமிழில் / சிங்களத்தில்
 2) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

03. தற்போதைய நிரந்தர முகவரி:
 1) தமிழில் / சிங்களத்தில்
 2) ஆங்கிலத்தில் (பெரிய எழுத்துக்களில்)

04. பால்: ஆண் M / பெண் F

05. பரீட்சைக்குத் தோற்றும் மொழி
 தமிழ் T சிங்களம் S ஆங்கிலம் E

06. தெரிவு செய்யும் பரீட்சை நகர எண்

 (11 ஆவது பந்தியில் குறிப்பிட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடவும்)

07. இனம்:
 சிங்களவர் - 1 இந்தியத்தமிழர் - 4
 இலங்கைத்தமிழர் - 2 ஏனையவர் - 5
 முஸ்லிம் - 3

08. நீங்கள் இலங்கைப் பிரஜையா? வம்சாவளியினாலா/பதிவு செய்யப்பட்டதனாலா என்பதைக் குறிப்பிடுக.

09. விவாகமானவரா / விவாகமாகாதவரா?

10. பிறந்த திகதி: வருடம் மாதம் திகதி
 2000-02-25 திகதியன்று வயது:
 வருடங்கள் மாதம் நாள்கள்

11. 1) நீங்கள் நிரந்தரமாக வதியும் மாவட்டம்
 2) பிரதேச செயலாளர் பிரிவு
 3) வதியும் கால எல்லை: தொடக்கம் வரை

12. தகைமைகள்:

12. 1) கல்வித்தகைமைகள்
 க.பொ.த. (சா/த) 1ஆம் அமர்வு ஆண்டு:
 சுட்டிலக்கம்:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

 க.பொ.த. (சா/த) 2 ஆம் அமர்வு ஆண்டு:
 சுட்டிலக்கம்:

| பாடங்கள் | தரம் | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

12. 2) விளம்பரத்தின் பந்தி 5 உ (II) இன்கீழ் தாங்கள் பெற்றுள்ள தகைமைகள்

| ஆண்டு | பரீட்சையின் பெயர் | சான்றிதழ் பெற்ற நிறுவனம் | சித்தியின் தரம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |

12. 3) விளம்பரத்தில் பந்தி 5 உ(III) இன் கீழ் தாங்கள் பெற்றுள்ள சேவை அனுபவம்

| திணைக்களம் / நிறுவனத்தின் பெயர் | பதவி | சேவைக்காலம் |
|---|---|---|

13. பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கு ஒட்டவும்.

14. இவ் விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விவரங்கள் யாவும் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை என்றும் பரீட்சைக்கட்டணம் செலுத்தப்பட்ட .................... பிரதேச செயலகத்தின் ...... .................... ஆம் இலக்க .................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளது என்றும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடப்பதற்கும் சம்மதிக்கின்றேன். மேலும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டு பிடிக்கப்பட்டால் பரீட்சையின் முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்த தன்மையை இரத்துச் செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வதற்கும் எனது இணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திகதி: ..................................
 விண்ணப்பதாரியின் கையொப்பம்

15. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.
 விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு/ திருமதி/ செல்வி .................. என்பவர் எனக்கு நன்கு தெரிந்தவர் எனவும்.............. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ......................
 கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்

கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர்:
பதவி:
முகவரி: (பதவி முத்திரை)
(விண்ணப்பப் பத்திரத்திலுள்ள பரீட்சார்த்தியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை அதிபர், சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, படைதாங்கு சேவையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலீஸ் சேவையின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடாந்த திரட்டிய வேதனமாக ரூபா 74,160 -க்கு மேற்பட்ட சம்பளத்தை உடைய அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகிய ஒருவரால் சான்றுபடுத்தப்பட வேண்டும்.)

16. (வடக்கு—கிழக்கு மாகாணத்திலிருந்து தற்காலிகமாக வேறு மாகாணத்துக்கு இடம் பெயர்ந்துள்ளவர்கட்கு மாத்திரம்)
 மேற்படி விண்ணப்பதாரி வடக்கு—கிழக்கு மாகாணத்தை நிரந்தர பிறப்பிடமாக / வதிவிடமாகக் கொண்டவர் என்பதையும் அவர் .................. திகதி முதல் தற்காலிகமாக இடம்பெயர்ந்து ..................மாகாணத்தில் வசித்து வருகின்றார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .....................
 பிரதேசசெயலாளர்/கிராமசேவகர் ஒப்பம்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

17. விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில்/ மாகாண பொதுச் சேவையில் உள்ளவராயின் திணைக்களத் தலைவரின் விதப்புரை அல்லது தற்போது கடமைபுரியும் நிறுவனத் தலைவரின் விதப்புரை:
 திணைக்கள/நிறுவனத் தலைவரின் உறுதியுரை: இத் திணைக்களத்தில் தற்காலிக / நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு/திருமதி/ செல்வி .................. அவர்களின் விண்ணப்பத்தைச் சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் இப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுமிடத்து விடுவிக்க முடியும் என்பதையும் இவர் தனது சேவைக்காலத்தில் எவ்வித ஒழுங்காற்று நடைமுறைக்கும் உட்படவில்லை என்றும் சகலவேதன ஏற்றங்களையும் பெற்றுள்ளார் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ......................
 திணைக்களத்தலைவரின் கையொப்பமும் பெயரும்

பதவி:
முகவரி:
(பதவி முத்திரை)

(சி/10769)

# இலவச வகுப்புகள்

நெல்லியடி, ஜன. 24

பருத்தித்துறை இளைஞர் சேவை மன்றசம்மேளனத்தின் அனுசரணையில் இலவச சங்கீதம், நடனம் மற்றும்மொழி வகுப்புக்கள் நடைபெற விருக்கின்றன.

இவ் வகுப்புகளில் சேர விரும்புவோர் ஆத்தியடியிலுள்ள அவர்களது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப் படுகின்றார்கள்.

[க-109]

# யுனிசெவ் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். மாவட்டத்தில் வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் 'யுனிசெவ்' நிறுவனத்தினால் ஆயிரத்து 917 தொகுதி கல்வி உபகரணங்கள் ஐந்து கல்வி வலய அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டங்களில் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அந்தந்த கல்வி வலயங்களினால் இந்த உபகரணங்கள் வழங்கப்படும் என்று 'யுனிசெவ்' வட்டாரங்கள் தெரிவித்தன.

அப்பியாசக்கொப்பிகள், பேனா, பென்சில்கள், கொம்பாஸ் பெட்டிகள் உட்பட பல கல்வி உபகரணங்கள் இந்தத் தொகுதியில் அடங்கியுள்ளன.

கல்வி உபகரணங்கள் வழங்கப்படவுள்ள கல்வி வலயங்களும் விவரங்களும் வருமாறு:

யாழ். கல்வி வலயம் —517 (தொகுதி உபகரணங்கள்) வலிகாமம் — 607, தென்மராட்சி—283, வடமராட்சி—341, தீவகம் — 169.

(இ-5)

# கலந்துரையாடல்

வேலணை, ஜன. 24

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட ஸ்தாபனத்தினால் கோழிக்குஞ்சு பொரிக்க வைக்கும் இயந்திரம் பெற்றவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளதாக உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்துள்ளார்.

(க-167)

# கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜன. 24

தேசிய கல்வி நிறுவக கல்வி மாணிப்பட்டக் கற்கைநெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நாளை என்றும் —

இதற்கான விண்ணப்பங்களை உடனடியாக யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் ஒப்படைக்குமாறும் —

சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி த. வில்வநாதன் தெரி துள்ளார்.

(ஐ-9)

# ஆரம்பக் கல்வி கற்பித்தல் உபகரணக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆரம்பப் பாடசாலைகளுக்கிடையேயான கற்பித்தல் உபகரணங்களின் கண்காட்சிப் போட்டி நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே அண்மையில் நடத்தப்பட்ட போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கற்பித்தல் உபகரணங்களே இக்கண்காட்சியில் இடம்பெற்றன.

மாணவர்களாலும் ஆசிரியர்'ளாலும் தயாரிக்கப்பட்ட கற்பித்தல் உபகரணங்களே கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்படுகின்ற உபகரணங்கள் வலய, மாகாண, தேசிய மட்டத்தில் நடைபெறும் கண்காட்சிப் போட்டிக்கு வைக்கப்படும்.

போட்டிகளில் வெற்றி பெறும் கற்பித்தல் உபகரணங்களை உருவாக்கிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என யாழ். [illegible] கல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-10)

# கணித மூலவள நிலையம் அமைப்பு

நாவற்குழி, ஜன. 24

மாணவர்களின் கணித அறிவை மேம்படுத்தும் முகமாக தென்மராட்சி கல்வி வலயத்தில் கணித மூல வள நிலையம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

இந் நிலையத்துக்குப் பொறுப்பாளராக ஆசிரியர் எஸ். பத்மநாதன் தென்மராட்சி கல்வி வலயத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந் நிலையம் இன்னும் சில வாரங்களில் தனது [illegible] டது.

[க-102]

# கூட்டுறவுச் சங்கங்களில் மாதிரி விற்பனை நிலையம்

அரியாலை, ஜன. 24

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மாதிரி விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக கூட்டுறவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு ஆக்க ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய இம் மாதத்திற்குள் இந்த விசேட மாதிரி விற்பனை நிலையங்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்க வேண்டும்.

சகல பொருள்களையும் பாவனையாளர்கள் நியாய விலையில் கொள்வனவு செய்யக்கூடியதாக இந்த மாதிரி விற்பனை நிலையங்கள் அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.

(க-17)

# காலமானார்

வடமராட்சி, ஜன. 24

யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் செயலாளர் அருட்திரு. பி. அருமைநாயகம் அடிகள் நேற்று அதிகாலை காலமானார்.

(ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பேச்சுப் பல்லக்கு...

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் முழு அளவில் இயங்கத் தொடங்கி எதிர்வரும் ஏப்ரல் மாதத்தோடு நான்கு வருடங்களாகப் போகின்றன. அதற்கு முன்னர் குடாநாடு முழுவதிலும் தடங்கல் அற்ற சீரான விநியோகம் வழங்க வேண்டும் என அரசாங்கத்திடம் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் தலைவர் ந. திரிவோகநாதன், நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் அனுரத்த ரத்வத்தவுக்கு எழுதிய கடிதத்தில் குடாநாட்டில் மின்சார விநியோகம் மிகவும் சீர்கெட்டிருப்பதனைச் சுட்டிக் காட்டி உள்ளார்.

அரசாங்க நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாணம் வந்ததன் பின்னர் மக்களுக்குக் கிடைத்த வசதிகளில் மின்சாரமும் ஒன்று. ஆனால் நான்கு வருடங்கள் கழியும் தறுவாயிலும் அது குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கவில்லை; கிடைத்தவர்களுக்கும் தடங்கலற்ற சீரான விநியோகம் இல்லை.

''பெயருக்கும் பிரசாரத்துக்கும் தான் மின்சார விநியோகமா'' என்று குடாநாட்டு மக்கள் ஒவ்வொருவரும்— அனைவருமே — கேட்கும் அளவுக்கு மின்சார விநியோகம் சீரற்றுள்ளது. மின்சார வசதி முற்றாக இல்லாதிருப்பதன் பாதிப்புகள் ஒரு வகை. விநியோகம் இருந்தும் மக்களுக்குப் பயனில்லாமல் போவது மேலும் மோசமானதாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உதவியுடனேயே அரசாங்கம் குடாநாட்டுக்கு மின்சார விநியோக வசதியைச் செய்ய ஆரம்பித்தது. அதற்கெனவகுக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் 1999 முற்பகுதியில் மின்சார விநியோகத்தில் நிலவும் சீரின்மை நீங்கிவிடும்; குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் மின்சார வசதி கிடைக்கும் என்று அப்போதும், அவ்வப்போதும் உறுதி மொழிகள் அளிக்கப்பட்டிருந்தன. ஆனால் இப் போது நிலைமை மிகவும் மோசமடைந்து உள்ளது. அனேகமாக மின்சார விநியோகம் முற்றாக இல்லாதிருந்த காலத்து அனுபவமே இப்போதும் என்று மக்கள் சலித்துக் கொள்கிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான மின்சார விநியோகத் திட்டத்தில், எங்கோ ஓர் இடத்தில் ஏதோ ஒரு பிழை இருக்கிறதா அல்லது அக்கறை இன்மையும் ஏனோ தானோ என்ற போக்கும் உள்ளூர் அதிகாரிகள் மட்டம் வரை பரவியுள்ளதா என்பது குறித்து அறிய மக்கள் ஆவலாக உள்ளார்கள்.

இந்தப் பின்னடைவுகளை நீக்கி, குடாநாட்டு மக்களுக்கு சீரான, ஒழுங்கான மின்சார விநியோக வசதி செய்யப்பட வேண்டும். இன்றைய காலத்தில் மின்சாரம் அன்றாட அத்தியாவசிய தேவையாக மாறியுள்ளது. ஆகையால் அதனை மக்கள் அதிருப்திப்படாதவாறு விநியோகிக்க சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் அக்கறை கொள்ள வேண்டும்.

தென்னிலங்கையில் குக் கிராமங்களிலும் மின் விநியோகத் திட்டங்கள் சீராக நடைமுறைப் படுத்தப்படுகின்றன. ஆனால் குடாநாட்டு மக்கள் அதற்காக இரந்து நிற்கும் நிலையே தொடருகிறது!

இந்த இலட்சணத்தில், குடாநாட்டு மக்களின் தேவைகள் பெரிய அளவில் நிறைவேற்றப் படுவதாகத் தோற்றமளிக்கும் வகையில் அரசாங்க ஊடகங்கள் பிரமாதப்படுத்துவது கேலிக் கூத்தாகும். பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்ற நிலை நீக்கப்படுவது எப்போது?

---

### 107 வருடங்கள் வாழ்ந்த

## ஜப்பானிய இரட்டையரில் ஒருவர் நேற்று மரணம்!

ரோக்கியோ, ஜன. 24

உலகில் வயது முதிர்ந்த இரட்டைச் சகோதரிகளில் ஒருவர் காலமாகி விட்டதாக அறிவிக்கப்படுகிறது. கிம், ஜின் என அன்பாக அழைக்கப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த இந்த இரட்டையர்களில் கிம் (வயது 107) என்பவரே நேற்று இறந்து விட்டார். இவருக்கு 11 பிள்ளைகளும் 7 பேரப்பிள்ளைகளும் 5 பூட்டப் பிள்ளைகளும் உள்ளனர்.

ஜப்பானிய மொழியில் ஜின் என்றால் வெள்ளி என்றும், கிம் என்றால் தங்கம் என்றும் அர்த்தம். தங்கமும் வெள்ளியுமான இந்த இரட்டையர்கள் உலகில் வயதில் கூடிய இரட்டையர்கள் என்ற பெருமையுடன் இறுதிவரை சேர்ந்து வாழ்ந்தனர். இப்போது ஜின் (வயது 107) தனித்துப் போயுள்ளார்.

(ஐ-6)

---

## ஜெயலலிதாவை விடுவித்ததை எதிர்த்து வழக்குத் தாக்கல்

ரான்ஸி நிலபேர ஊழல் வழக்கில் இருந்து அ.தி.மு.க பொதுச் செயலர் செல்வி ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

வழக்குத் தொடர்பான ஆதாரங்களை பரிசீலிக்காமலேயே ஜெயலலிதாவை சென்னை உயர் நீதிமன்றம் விடுதலை செய்திருப்பதை ஏற்க முடியாது என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனு மீதான விசாரணைகள் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சிறு கைத் தொழில் நிறுவனத்தின் நிலங்கள் கட்டடங்கள் என்பவற்றை 'ஜெயாபப்ளிகேஷன்' மற்றும் 'சசி என்டபிரைஸஸ்' என்ற நிறுவனங்களுக்கு குறைந்த விலையில் விற்க ஜெயலலிதா தனது அரச செல்வாக்கைப் பயன்படுத்தினார். இதனால் அரசுக்கு 3.5 கோடி இந்திய ரூபா நஷ்டம் ஏற்பட்டது என்று தி.மு.க அரசு ஜெயலலிதா மீது இந்த வழக்கை தாக்கல் செய்திருந்த வழக்கை 6 மாத காலமாக விசாரணை செய்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி உரிய ஆதாரங்கள் இல்லாமையினால் வழக்கில் இருந்து ஜெயலலிதாவை விடுதலை செய்திருந்தது தெரிந்ததே. (ஐ-6-5)

---

# ஈகுவடோரில் அமைதியான ஆட்சிக் கவிழ்ப்பு!

குயிற்றோக், ஜன. 24

தென் அமெரிக்க நாடான ஈகுவடோரில் கடந்த வெள்ளியன்று ஏற்பட்ட புரட்சிக்குப் பின்னர் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள குட்சாவோ நொபோவாவுக்கு ஆதரவு அளிக்கும்படி பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதி ஜமீல் மகுவத் நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

தொலைக்காட்சி மூலம் நேற்று நாட்டு மக்களுக்கு அவர் ஆற்றிய உரையிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஈகுவடோரின் ஜனாதிபதியாக 1998 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஜமீல் பதவியேற்றார். நாட்டில் வேலையின்மை, பணவீக்கம், பொருளாதார வீழ்ச்சி ஆகியன தலைவிரித்தாடிய நிலையில் அமெரிக்க டொலர் நாணயத்தை நாட்டின் நாணயமாக அறிவித்தமையே அவரது பதவிக் கவிழ்ப்புக்குக் காரணமாக அமைந்தது,

முப்படைகளையும் சேர்ந்த தளபதிகள் ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் என்று கோரி வந்தனர். எனினும் ஜமீல் அதற்கு மறுப்புத் தெரிவித்து வந்தார். இந்த நிலையில் கடந்த வெள்ளியன்று அவர் பதவி கவிழ்க்கப்பட்டார்.

ஜனாதிபதி பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து துணை ஜனாதிபதி குட்சாவோ நொபோ ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்டார், அவருக்கு முப்படைகளினது ஆதரவும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஜனாதிபதி நாட்டில் தற்போது நிலவிவரும் வேலையில்லாப் பிரச்சினை, பணவீக்கம், பொருளாதார வீழ்ச்சி ஆகிய விடயங்களுக்கு உடனடித் தீர்வு காணவேண்டிய நிலையில் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ஐ-6)

---

## 100 ஆயுதபாணிகள் கைது செய்யப்பட்டார்

ஜகார்த்தா, ஜன. 24

இந்தோனேசியாவின் மாலுக் மாகாணத்தில் அண்மையில் இடம் பெற்ற வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் 113 ஆயுத பாணிகளை இந்தோனேசியப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

தலைநகர் ஜகார்த்தாவுக்கு வெளியே இரண்டு படகுகளில் வந்திறங்கிய இவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டதாகவும்—

அவர்களிடம் இருந்து பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும்—

ஜகார்த்தாப் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 100 பேர் கிழக்குத் திமோரில் இருந்து தப்பி வந்து மேற்குத் திமோர் அகதி முகாம்களில் தங்கி இருப்பவர்கள் என்று கூறப்படுகின்றது.

---

## இந்திய - பாக். எல்லையில் சனியன்று திடீர் மோதல்!

புதுடில்லி, ஜன. 24

இந்திய —பாகிஸ்தான் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கடும் சண்டையின் பின்னர் நேற்று அப்பகுதியில் அமைதி நிலவியதாக இந்திய இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இந்தியாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தின் குளிர்காலத் தலைநகரான ஜம்முவிற்கு அருகில் உள்ள எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் இந்தியப் படையினருக்கும் பாகிஸ்தான் படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலில் 11 பாகிஸ்தான் படையினரும் 2 இந்தியப் படையினரும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது.

ஜம்முவில் உள்ள கலன் வாலா பகுதியில் அமைந்திருந்த காவலரண் மீது பாகிஸ்தானியப் படையினர் திடீரெனத் தாக்குதல் நடத்த ஆரம்பித்ததாகவும் —

இந்தியப் படையினர் நடத்திய பதில் தாக்குதலில் 11 பாகிஸ்தான் படையினர் பலியானதாகவும்—

இந்திய இராணுவம் தெரிவித்தது.

அதேசமயம்—

பாகிஸ்தானியப் படையினரின் காவலரண்கள் மீது 100 பேர் கொண்ட இந்தியப் படையினர் தாக்குதல் நடத்தியதாகவும்—

இதில் தமது தரப்பில் இரு படையினர் உயிரிழந்ததுடன் ஐந்து பேரைக் காணவில்லை என்றும்—

பாகிஸ்தான் படையினர் தெரிவித்தனர்.

(ஐ-6-5)

---

### நாளை

**தை 11**

**செவ்வாய்க்கிழமை**

திதி: பஞ்சமி

வைகறை 4.49 வரை

நட்சத்திரம்: உத்தரம்

பின் இரவு 2.17 வரை.

சுபநேரம்: 11.06—12.36

ராகுகாலம்: 3.36—5.06

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

**உலக அரங்கில்**

## சந்தேக நபர் கைது

பெல்கிரேட், ஜன. 24

பொஸ்னியாவில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பாக யுத்தக் குற்றவாளி எனத் தேடப்பட்டு வந்த ஆர்கனை கொலை செய்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை யுகோஸ்லாவியப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-6)

---

**உதய வாக்கு**

வீட்டுக்கு ஒளி தரும் விளக்கே, வீட்டை எரிக்கவும் [illegible]

— [illegible] தாகூர்

---

### சுபாஸ் சந்திரபோஸ் மறைவு குறித்து

## ரஷ்ய ஆவணக்காப்பகங்களில் தகவல் பெற இந்தியா முயற்சி

புதுடில்லி, ஜன. 24

இந்திய சுதந்திரப் போராட்டக் காலத்தில் ஆயுத மேந்திப் போராடிய தலைவரான நேதாஜி சுபாஸ் சந்திரபோஸின் மர்ம மறைவு குறித்து விவரங்களைப் பெறுவதற்காக ரஷ்யாவின் ஆவணக்காப்பகங்களில் ஆய்வு நடத்த இந்திய அதிகாரிகளை அனுமதிக்கும்படி இந்தியா ரஷ்யாவிடம் கோரி உள்ளது.

பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

புதுடில்லியில் தன்னைச் சந்தித்த பாரதீய ஜனதாக் கட்சியின் கிழக்குப் பிராந்தியத் தலைவர்களிடம் அவர் இதனைக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் பிரிட்டிஷ் படையினருக்கு எதிராக இந்தியர்களைத் திரட்டி ஆயுதப் போராட்டம் ஒன்றை நடத்தி வந்தார். இந்த நிலையில் 1945 ஆம் ஆண்டு ஜப்பானில் இருந்து விமானத்தில் இந்தியா திரும்பிக் கொண்டிருந்த போது விமானத்துடன் அவர் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்டது.

சுமார் 55 ஆண்டுகள் கழிந்துவிட்ட நிலையில் சுபாஸ் சந்திரபோஸ் எவ்வாறு காணாமற்போனார் என்பது குறித்து ஆராய இந்தியா முன்வந்துள்ளது.

சுபாஸ சந்திரபோஸின் 103 ஆவது பிறந்த தினம் நேற்று ஆகும். [ஐ-6-5]

---

### இந்தியாவில் ஒரு வார காலம் நீடித்த

## துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் முடிவடைந்தது

புதுடில்லி, ஜன. 24

இந்தியாவில் உள்ள முக்கிய பதினொரு துறைமுகங்களையும் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் ஊழியர்கள் கடந்த ஒரு வாரமாக நடத்தி வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் கைவிடப்பட்டுள்ளது.

ஊழியர்களின் 5 தொழிற் சங்கங்களுக்கும் தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குக்கும் இடையில் தொடர்ந்து இரண்டு நாள்கள் நடைபெற்ற பேச்சுக்களை அடுத்து வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

இந்த ஒரு வாரகால வேலை நிறுத்தத்தால் நாட்டின் முக்கிய துறைமுகங்களின் பணிகள் அனைத்தும் ஸ்தம்பித்துப் போயின. இதனால் பல கோடி ரூபா நஷ்டம் இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பொமெனேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தினேஸ், இலங்கை வங்கி அருகில், மானிப்பாய். (72935)

வொக்ஸ்வகன் 3 சிறி, 9 சிறி, 32 – 64 -, தொடர் இலக்கமுடைய நல்ல நிலையில் உள்ள டீசல் A/C கார்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கி. தனபதி, கிராம்புவில், சாவகச்சேரி T.P. FAX -070 – 212300. (72866)

நல்ல நிலையில் உள்ள 2 சிறி ஐயாயிரம் தொடர் இலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: மு. விமலநாதன் 16/12, விதானையார் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (72925)

வெள்ளைநிற இத்தாலி வெஸ்பா மிகவும் நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. 33, கைலாசபிள்ளையார் கோயில் மேற்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி10758)

சொனி ரீ. வி 20'' (2092) ஹொண்டா ஜெனரேற்றர், EN மொடல் வொக்ஸ்வகன் கார் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. பத்மநாதன் கல்லூரி ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரி. (72959)

புதிய Econopower Super Cub 90 விற்பனைக்குண்டு. (Brand New) தொடர்பு இல.558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3191. (72991)

## தவறிவிட்டது

ஐயனார் கோவில் வீதி, கோப்பு வளவு சுன்னாகத்தைச் சேர்ந்த யோகநாதன் செல்லாச்சிப்பிள்ளை என்பவரது தேசிய அ. அ (585594687 V), விஷேட அடையாள அட்டை என்பன 17-01-2000 அன்று 769 இலக்க தெல்லிப்பழை பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுன்னாகம் கரன் புத்தக நிலையம் அல்லது மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (72992)

## படிவம்

ஆசிரிய கலாசாலை விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி 2000-02-07 படிவம் ரூபா 3.00, தபால் உறைரூபா 1.00. பாரதி 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (சி/ 10758)

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கில் மீசாலை புத்தூர் வீதியில் வேம்பிராய்ச் சந்தியிலிருந்து 300 யார் தொலைவில் நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் தென்னங்காணி நிலப்பரப்பு 24 விற்பனைக்கு உண்டு. குடியிருக்கத்தகுந்த காணி. விவரங்கட்கு: சி. சண்முகநாதன் அல்லது ப. கண்ணன் டச்சு வீதி, மீசாலை வடக்கு. (72962)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி புறோயிலர் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தல் இலவசம். தொடர்பு; மான்ஸ் பாடசாலைவீதி, உடுவில், சுன்னாகம். (72981)

## விண்ணப்பப் படிவம்

ஆசிரியர் கல்விக் கல்லூரிக்கான படிவம் விற்பனையாகின்றது. நாயகபாலன், மானிப்பாய். (72964)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## திருச்செல்வம் ரவிதர்சன்

11 - 12 - 1999 அன்று அகாலமரணம் அடைந்த எமது கல்லூரி மாணவன் திருச்செல்வம் ரவிதர்சனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி.**

(சி/10774)

---

# கண்ணீர் அஞ்சலி

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றக் கொழும்புக் கிளை உப தலைவர்

திருமதி யோகலட்சுமி
அவர்களின் துணைவர்

## அமரர் குமார் பொன்னம்பலம்

கொழும்புக் கிளைச் செயலாளர்
திரு. சூ. பாலச்சந்திரன்
அவர்களின் துணைவியார்

## அமரர் கமலாம்பிகை

ஆகியோரின் இழப்பினால் துயருறும் அவர் தம் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றமும்,
கல்லூரிச் சமூகமும்.

பருத்தித்துறை. (சி/10772)

---

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி நாகம்மா கனகரத்தினம்

எமது கல்லூரி ஆசிரியை
**திருமதி பத்மினி மகாதேவனின்**
அன்பு மாமியார் காலஞ்சென்ற
**திருமதி நாகம்மா கனகரத்தினம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்திக் கொள்வதோடு, துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**யா / கொக்குவில் இந்துக்கல்லூரி.**

(சி/10775)

---

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 25 – 03 – 1924 | 27 – 01 – 1997 |

## அமரர் கணபதிப்பிள்ளை செல்லம்மா

**திதி: 24-01 2000**

அன்பின் உறைவிடமாய்
அரவணைப்பின் அமைவிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
இருந்துகாட்டி — எமையெல்லாம்
ஆறாத்துயரில் மூழ்க வைத்து
மூவாண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் நெஞ்சம்.

**கணவன், மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

வத்திராயன் தெற்கு,
தாளையடி. (73001)

---

வட்டு. கிழக்கு, வட்டுக்கோட்டை

# ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்

# யந்திரபூஜை விஞ்ஞாபனம்

பிரமாதி வருஷம் தை 26 ஆம நாள் 09-02-2000 காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் அம்பாளின் துணை கொண்டு யந்திரபூஜை ஆரம்பமாகும்.

பிரதமகுரு:
'சித்தாந்த வித்தகர்'
திரு. கு. ஜெகதீஸ்வரக் குருக்களின்
தலைமையில் நடைபெறும்.

30-03-2000 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 17 ஆம் நாள் **மகாகும்பாபிஷேகம்** நடைபெறும்.

பொ. நவரத்தினராசா,
பொ. இரத்தினராசா.
(ஆலய தர்மகர்த்தாக்களும்,
பாதுகாவலர்களும்)

(73002)

---

# ஹாட்லிக் கல்லூரி

## பழைய மாணவர் மன்றம்

## வருடாந்தப் பொதுக் கூட்ட

# அறிவித்தல்

ஏற்கெனவே அறிவித்த திகதியில் மேற்படி பொதுக் கூட்டத்தை நடத்த முடியாமற் போனதால் மீண்டும் 06-02-2000 ஞாயிறு காலை 10.00 மணிக்கு குறித்த நிகழ்ச்சி நிரலின்படி நடைபெறும் என்பதைத் தெரியத் தருகின்றோம்.

நன்றி.

, இணைச் செயலர்.

பழைய மாணவர் மன்றம்,
ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை. (சி/10773)

---

# புதுக்கடைத் திறப்புவிழா

★★★★★★★★★★★★★★★★

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் தை மாதம் இன்று (24-01-2000) திங்கட்கிழமை காலை 9 45 — 11.30 மணி வரையுள்ள சுப நேரத்தில்

## சுதாஸ் கலைச் சோலை

என்னும் பெயர் கொண்ட ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதினால் அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தந்து

**சுதாஸ் கலைச் சோலையை**

வாழ்த்திச் செல்லுமாறு வேண்டுகின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

# சுதாஸ் கலைச்சோலை

182, செம்மணி வீதி, நாயன்மார்கட்டு.

(72994)

---

# கண்ணீர்ப் பூக்கள்

இறைவனுக்கும் இறைமக்களுக்கும்
அரும்பணியாற்றி இறைபதம் எய்திவிட்ட

## அருட்பணியாளன் ஜோ. அருமைநாயகம்

அடிகளாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை
அஞ்சலியாக்குகிறோம்.

இவர் பிரிவால் துயருறும் யாழ். ஆயர், மறைமாவட்டக் குருக்கள், அன்புத்தாயார், சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் எமது செபத்துடன் கூடிய ஆழ்ந்த அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்கின்றோம். இவர் ஆன்மா இறைபதத்தில் சாந்தி பெறுவதாக.

**அமலமரித் தியாகிகள்,**
**யாழ். மாகாணம்.**

[73004]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## S. J. மனுவேற்பிள்ளை

[ உரிமையாளர், றேடியோ மனுவல் ]

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரது துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டியும் பிரார்த்திக்கின்றோம்.

**இங்ஸ்ரன் எலெக்ரோனிக்ஸ்**
**உரிமையாளரும், ஊழியர்களும்.**

(72961)

# இதய அஞ்சலி

எமது சக மாணவன்
**ச. கெங்காதரன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

## அமரர் வீ. சண்முகநாதன்

அவர்கள் 20-01-2000 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

1ஆம் வருட முகாமைத்துவ மாணவர்கள்
**யாழ். பல்கலைக்கழகம்**

(72984)

# வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்,

வல்வெட்டித்துறை.

அமைய அடிப்படையிலான

## தூதுவர், பதிவேட்டுக் காப்பாளர், சுகாதாரத் தொழிலாளி, சாரதி, இரவுக் காவலாளி

# பதவிகளுக்கான வெற்றிடங்கள்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் வெற்றிடமாகவுள்ள மேற்படி பதவிகளை அமைய அடிப்படையில் நிரப்புவதன் பொருட்டு பின்வரும் தகைமைகளை உடைய இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

விண்ணப்பங்கள் யாவும் 07 - 02 - 2000 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 12-00 மணிக்கிடையில் கிடைக்கக்கூடியதாக, சுயவிவரத்தை அடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக எனக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

### 1 ] தகைமைகள்:

1. விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்
2. சுகாதாரத் தொழிலாளி, சாரதி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக 5 ஆம் தரச் சித்தியையும் தூதுவர், பதிவேட்டுக் காப்பாளர். இரவுக் காவலாளி பதவிக்கு விண்ணப்பிப்பவர் 8 ஆம் தரச் சித்தியையும் கொண்டிருத்தல் வேண்டும்.
3. சாரதி பதவிக்கு விண்ணப்பம் செய்பவர்கள் கனரக வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம் ( கனனிமயப்படுத்தப்பட்ட ) பெற்றிருப்பதோடு குறைந்தது நான்கு வருட அனுபவ முதிர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
4. நன்நடத்தையும் சிறந்த தேகாரோக்கியமும் உடையோராக இருத்தல் வேண்டும்.

### 2 ] நிபந்தனைகள்:

1. சுகாதாரத் தொழிலாளர் பதவிக்கு நாளொன்றுக்குரிய சம்பளம் ரூ. 131 உம் சாரதி பதவிக்கு நாளொன்றுக்குரிய சம்பளம் ரூ. 145 உம் இரவுக் காவலாளி, தூதுவர், பதிவேட்டுக் காப்பாளர் பதவிக்கு நாளொன்றுக்குரிய சம்பளம் ரூ. 140 உம் ஆகும்.
2. நியமனம் முற்று முழுக்கத் தற்காலிக அடிப்படையிலான அமைய நியமனம் ஆகும். இதன் மூலம் எவ்வித நிரந்தர தகைமைக்கும் உரிமை கோர முடியாது.
3. சேவை அவசியமற்றதாகக் கருதப்படும்போது 24 மணித்தியால முன்னறிவித்தலில் சேவை முடிவுறுத்தப்படும்.
4. இம்மன்ற எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும் உயர் தகைமை உள்ளவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.

**ம. க. சிவாஜிலிங்கம்**
தலைவர்
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

**பெ. கனகசபாபதி**
செயலாளர்
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்றப் பணிமனை,
வல்வெட்டித்துறை,
19 - 01 - 2000

[illegible]

### புலோப்பளை கிளாலிப் பகுதிகளில்

# 91 மீனவக் குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்கப்படும்

தென்மராட்சி, ஜன. 24

பளை பிரதேசத்திலுள்ள புலோப்பளை, கிளாலி ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட 91 மீனவக் குடும்பங்களுக்கு கடற்றொழில் திணைக்களத்தினால் தலா 75 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

வீடுகள் அமைப்பதற்கு அத்திவாரக்கல் நடும் வைபவம் நேற்று காலை புலோப்பளையில் பளை கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் மி, அலேன் தலைமையில் நடைபெற்றது.

ஐந்து வீடுகளுக்கு நேற்று அத்திவாரக்கல் நடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில்யாழ் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.(ஐ-117)

## இரவல்கொடுக்கும் பகுதி

யாழ்ப்பாணம், ஜன. 23

கோண்டாவில் விவேகானந்தா சனசமூகநிலையத்தின் படிப்பகத்தில் புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## கிளைக்குழு தெரிவு

யாழ்ப்பாணம்' ஜன. 22

அளவெட்டி—மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தின் 11 கிளைகளுக்கான கிளைக்குழுத் தெரிவு கடந்த 16 ஆம் திகதி நடைபெற்றது.

விரைவில் கிளைக்குழு உத்தியோகத்தர் தெரிவும் பொதுச்சபை பேராளர் தெரிவும் இடம்பெற உள்ளன.

(ஐ-10)

## வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கு ஜப்பான் உதவும்

கொழும்பு, ஜன. 24

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு, புனருத்தாரணப் பணிகளுக்கு வேண்டிய உதவிகளை ஜப்பான் வழங்கவுள்ளது என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஜப்பானிய வெளியுறவு அமைச்சின் சர்வதேசக் கடன் உதவிப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இரண்டாயிரமாம் ஆண்டில் வழங்கவுள்ள உதவித் திட்டங்கள் குறித்து இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவந்த இவர் கடந்த வெள்ளியன்று ஜப்பானிய தூதரகத்தில் செய்தியாளர் மாநாடு ஒன்றினை நடத்தினார்.

இந்த மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

வடக்கு — கிழக்கு மாகாணத்துக்கு நாம் வழங்கவிருக்கும் உதவிகள் பற்றி விரைவில் அறிவிப்போம்.

இலங்கையில் அமைதியும், சமாதானமும் ஏற்படவேண்டும் என்பதே ஜப்பானிய அரசாங்கத்தினதும் மக்களினதும் விருப்பமாகும்.

சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் இனப்பிரச்சினையைத் தீர்த்து யுத்தத்தை நிறுத்துவதற்கு பேச்சுவார்த்தை மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இப்படிக் கூறினார்.

(இ-5)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 24

புனரமைப்பும் புனர் அபிவிருத்தியும் என்ற பொருளில் கனேடிய பல்கலைக்கழகம் யாழ். பல்கலைக்கழக புவியியல் துறையுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் ஆய்வரங்கு ஒன்றினை நடத்தவுள்ளது.

இந்த ஆய்வரங்கு பெப்ரவரி 14 ஆம், 15 ஆம், 16ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆய்வரங்கில் கலந்துகொள்வதற்கென கனேடிய பல்கலைக்கழகமான 'பிரிட்டிஷ் கொலம்பியா'வின் பேராசிரியர்களான ஏ. யுகியான், வான்எலன் ஆகியோர் [illegible] தரவுள்ளனர்.

(இ-5-10)

# நீங்காத நினைவுகளில் 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| அவனியில்: | சொர்க்கத்தில்: |
|---|---|
| 29 — 09 — 1929 | 23 — 01 — 1992 |

## திருமதி பரமேஸ்வரி இராசையா

(சமாதான நீதிபதி திரு. இ. இராசையாவின் துணைவி)

திதி: 24—01—2000

எட்டாண்டுகள் ஓடி மறைந்தன
மட்டில்லா சோகம் மறையவில்லை
குடும்பச் சுடர் விளக்காய் சோபித்தாய் நீ!
இடும்பை தர எம்மை விட்டுப் பிரிந்ததேனோ?
அன்பினிலும் பண்பினிலும் வான்மதியாய் பிரகாசித்தாய்
நினைவினிலும் கனவினிலும் நினைப்போம் மறவோம்!
இறைவன் இன்னடி நீ எழிலாய் வாழ
நிறை மனதாய் இறைஞ்சுகிறோம் நிமலன் தாளை.

துயருறும்:
**கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.**

"இந்திரப் பிரஸ்தம்".
221, கண்டி வீதி, கச்சேரியடி,
யாழ்ப்பாணம். (72953)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



## செல்வன் திருச்செல்வம் ரவிதர்சன்

| அன்னை மடியில் | ஆண்டவன் அரவணைப்பில் |
|---|---|
| 06-02-1985 | 11-12-1999 |

குஞ்சியழகும் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல அதைவிடமிஞ்சும்
உலகின் கல்வியழகே! அழகு என்றுணர்ந்த
புண்ணியனே! நீர் மங்கிவிட்ட போதினிலும்
மங்கவில்லை நீர் தந்த உயர் பெறும் கலையொழி
வாழ்க்கையே! நாடகமென வாழ்ந்து காட்டிடவோ!
இயல், இசை, நாடக மெல்லாம் இயற்றியே!
இறைபதம் அடைந்தனன் காண்.

11-12-99 அன்று அகால மரணமடைந்த அன்னாரின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, பக்ஸ் மூலம் அனுதாப செய்திகளை அனுப்பியோருக்கும் வேறுபல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியைத்தெரிவித்துக் கொள்கின்றோம்:

தகவல்:
**தாய், தந்தை, சகோதரர்கள் உற்றார், உறவினர்கள்**

பழைய தபால்கந்தோர் ஒழுங்கை,
தலையாழி, கொக்குவில்.

(72972)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட நூல்களில் இடம்பெற்ற தவறுக்கு பொறுப்பேற்று பதவி விலகவேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கடிதம்

கொழும்பு, ஜன. 24

கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தரம் 2, தரம் 7, தரம் 10 ஆகிய பாட நூல்களில் எழுத்துப் பிழைகள் ஏற்பட்டுள்ளதால் கல்வி வெளியீட்டுத் திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஜி. எல். அபயநாயக்கா, பாட நூலாசிரியர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜெயதிலக்கா ஆகியோர் இத்தவறுகளுக்கு தார்மீகப் பொறுப்பேற்று தமது பதவிகளை இராஜினாமாச் செய்ய வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த காலங்களில் பாட நூல் வெளியீட்டுக்குழு, பதிப்பாசிரியர் குழு, எழுத்தாளர் குழு, ஆலோசனைக்குழு போன்றவற்றில் உறுப்பினர்களை இன விகிதாசார அடிப்படையில் நியமனம் செய்ய வேண்டும் என்று போராட்டங்கள் நடத்தப்பட்ட போது ஜனாதிபதி, கல்வியமைச்சர் மற்றும் உலகவங்கி அதிகாரிகள் இந்தநியமனம் அவ்வாறே வழங்கப்பட வேண்டும் என்று கூறிய போதிலும் அதிகாரிகளின் அசமந்தப்போக்கினால் இந்த நியமனங்கள் வழங்கப் படவில்லை.

மேலும் இந்த வருட பாட நூல்களில் தேசிய கீதம் மற்றும் கல்வியமைச்சரின் பெயர் போன்றவற்றிலும் தவறுகள் இருக்கின்றன.

கடந்த வருடம் இந்த நூல்களில் தவறு ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டிய போது புத்தாயிரமாம் ஆண்டு வெளியிடப்படும் நூல்கள் ஒவ்வொன்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பரிசிலனையின் பின்னரே வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அவ்வாறு பாட நூல் எதுவும் பரிசிலனைக்கு ஆசிரியர் சங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

இப்படி அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5)

## ஆலயங்களில் மீண்டும் நேற்று வழிபாடு

அரியாலை, ஜன. 24

கொழும்புத்துறை செபமாலை தேவாலயத்தில் நடந்த சுமார்ஒருமாத காலத்தின் பின்னர் நேற்றுக் காலை அருட்திரு. எட்வின் வசந்தராஜா தலைமையில் விசேட பூஜை ஆராதனைகள் இடம் பெற்றன.

இதேவேளை —

பாஷையூர் புனித அந்தோனியார் கோயில், கொழும்புத்துறை சூசையப்பர் கோயில், பாண்டியன் தாழ்வு சந்தனமாதா கோயில் போன்ற ஆலயங்களிலும் நேற்று ஆராதனைகள் இடம் பெற்றன.

கரையோரப் பகுதிகளில் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததால் சில ஆலயங்களில் ஆராதனைகள் இடம்பெறாமல் இருந்து வந்தன.

(ஐ-17)

## கண்காட்சி

நெல்லியடி, ஜன. 24

புலோலி கிழக்கு புற்றளை வீதியிலுள்ள தையல் பயிற்சி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சியும் விற்பனையும் இன்றும் நாளையும் இருநாள்கள் நடைபெறவிருக்கின்றன.

வடக்கு— கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் இவ்விழா புலோலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச. வேலும்மயிலும் தலைமையில் இடம் பெறும்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி முதன்மை விருந்தினராகவும் கரவெட்டி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன், யாழ். செயலக மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். செல்வரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வார்கள்.

(ஐ-109)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 24

வடக்கு—கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடத்தப்படும் தையல், மனையியல் பொருள்காட்சி நேற்று புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் ஆரம்பமானது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே. எக்ஸ் செல்வநாயகம் தலைமையில் கண்காட்சி ஆரம்பமானது.

கண்காட்சி தொடர்ந்து இன்றும் நடைபெறும்.

(ஐ)

## தியாகராஜர் ஆராதனை

வலிகாமம் தெற்கு, ஜன. 24

யாழ்ப்பாணம் பாரதி கான சபா ஆதரவில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்குதியாகராஜர் உற்சவத்தை முன்னிட்டு தியாகராஜர் ஆராதனைகள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி முன் ஒழுங்கையில் உள்ள வயலின் வித்துவான் பிரம்ம ஸ்ரீ சர்வேஸ்வர சர்மாவின் இல்லத்தில் நடைபெற உள்ளன.

இவ்வாராதனை விழாவில் வளரும் கலைஞர்களும், வித்துவான்களும் கலந்து கொண்டு தியாகராஜகீர்த்தனைகளைப் பாடி தியாகராஜருக்கு சமர்ப்பணம் செய்வார்கள்.

(ஐ-152)


சுகாதாரச் சீர்கேடா? யார் காரணம்?
உள்ளூராட்சிச் சபையா?
சுகாதாரத் திணைக்களமா?
கவலை வேண்டாம்!

இதோ
நல்ல சுத்தம் (கிளீன்வெல்) நிறுவனம்

உங்கள் தனிச் சுகாதாரத்தையும் பொதுச் சுகாதாரத்தையும் மேம்படுத்த வந்துவிட்டது.

'' சுத்தம் சுகம் தரும் '' — முதுமொழி.
'' நல்ல சுத்தம் பொருளாதாரத்தை மேம்படுத்தும் '' — புதுமொழி

உங்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்குத் தொடர்பு கொள்ளுங்கள்:—

கிளீன்வெல்
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2849 (72530)


## கண்ணீர் அஞ்சலி

எமது முன்னாள் அதிபர்
அருட்சகோதரி ஸ்ரனிஸ்லாஸ் மேரி
அவர்களின் அன்புச் சகோதரி

### செல்வி அகத்தம்மா பிறாஸ்பிள்ளை

அவர்கள் 22—01—2000 அன்று காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியடையும் வேளையில் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

யா/புனித ஜோண்பொஸ்கோ வித்தியாலயம்
றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (சி/10771)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி அகத்தம்மா பிறாஸ்பிள்ளை

(ஆயுள்வேத வைத்தியர்)

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சூசைப்பிள்ளை பிறாஸ்பிள்ளை, பிறாஸ்பிள்ளை அவுரேலியாப்பிள்ளையின் அன்புமகள் செல்வி பிறாஸ்பிள்ளை அகத்தம்மா 22-01-2000 அன்று (சனிக்கிழமை) காலமாகிவிட்டார்.

இவர் காலம் சென்றவர்களான பார்பராயோசவ் சூசைப்பிள்ளை, றோசமுத்து (ஆசிரியை) லூயிஸ் மேரி, அன்னம்மா, அந்தோனிப்பிள்ளை, செசிலியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கார்மேல் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி ஸ்ரனிஸ்லாஸ் மேரியின் (இளைப்பாறிய அதிபர் புனிதஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,யாழ்ப்பாணம்) பாசமிகு அக்காவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24-01-2000 இன்று காலை 9.30மணிக்கு சில்லாலை கதிரைமாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
அருட்சகோதரி ஸ்ரனிஸ்லாஸ் மேரி
(லூர்துமடம், கோயில்வீதி, யாழ்ப்பாணம்)

சில்லாலை,
பண்டத்தரிப்பு. (72987)

### தம்பையா தருமலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தருமலிங்கம் அவர்கள் 18—01—2000 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், உமாகரன், சுபாஸ்கரன், சுரேஸ், ஜெகதீஸ்வரன், கலாநிதி, வினிதா, சுகதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பிரபுராஸ், கவிதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (24-01-2000) கனடாவில் நடைபெறும்.

தகவல்:
க. த. சோமசேகரம்
(சகோதரர்)

5 ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (72989)

## 31ஆம்நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### செல்லையா பொன்னம்பலம்

(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

மலர்வு 20-07-1931 உதிர்வு 25-12-1999

அன்பின் திருவுருவே:
பாசத்தின் ஒளி விளக்கே
எம்மையெல்லாம் பூமியிலே
பேரோடும் புகழோடும்
வாழவைக்க வேண்டுமென்று
அரும்பாடு பட்டீர்கள்;
புகழாரம் தந்தீர்கள்;
உங்கள் அன்பு மனையாளை
பாசத்தின் நல்லாளை
கண்ணீரில் வாழவிட்டு
கணப்பொழுதில் நீங்கள்
மறைந்து விட்ட மாயம்தான் நாமறியோம்
கண்களை கண்ணீர்த்திரை மறைக்கின்றதே.
காலம் தோறும் கை எடுப்போம் வல்ல இறையோனிடம்
நல்ல முறையில் ஆறுதல் அடைய வேண்டி நிற்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் உதவிகள் புரிந்தவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் (24-01-2000) இன்று அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,

தென்னிங்கவத்தை வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (72988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 153ஆவது ஆராதனை விழா

இடம்: இராமநாதன் நுண்கலைக்கழக மண்டபம்

காலம்: 25-01-2000 செவ்வாய்க்கிழமை 9.00 — 4.00 வரை

கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**கவின் கலை மன்றம்**

இராமநாதன் நுண்கலைக்கழகம்,
யாழ். பல்கலைக்கழகம். (73007)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**அருள்திரு ஈ. ஜே. அருமைநாயகம்**
நேற்று 23-01-2000 ஞாயிற்றுக்கிழமை
இறைபதம் அடைந்த
எம் அன்புக்குரிய ஆசான்
**அமரர் அருள்திரு ஈ. ஜே. அருமைநாயகம்**
அடிகளாரின் ஆன்மா சாந்தியடைய இறைவரம் வேண்டி எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

**புனித சவேரியார்**
**குருத்துவக் கல்லூரிக் குடும்பம்.**

கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (சி/10779)

## மரண அறிவித்தல்கள்

### V. S. நடராசா
(சட்டத்தரணி)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட V. S. நடராசா (சட்டத்தரணி) அவர்கள் 23-01-2000 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், மீனலோஜினி (லண்டன்), இராசேஸ்வரி, காலஞ்சென்ற சில்ராசா, சூரியகுமாரி, சண்முகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி தையல்நாயகி சச்சிதானந்தத்தின் (செட்டியா மடம்) சகோதரனும், காலஞ்சென்றவர்களான தர்மராசா, இராஜகாந்தி, இரத்தினசபாபதி, சுகிர்தாம்பிகை (லண்டன்), காயத்திரிதேவி ஆகியோரினதும் மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(24-01-2000) திங்கட்கிழமை முற்பகல் 10-00மணிக்கு நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ந. சண்முகராசா

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (சி/10772)

### சண்முகராசா இந்திரகுருபரன்
(உரிமையாளர், வெஸ்கோ கிறீம் கவுஸ், திருநெல்வேலி.)

இணுவில் மேற்கு, இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட சண்முகராசா இந்திரகுருபரன் 23-01-2000 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் அனுஷாவின் அன்புக் கணவரும் சண்முகராசா - விமலாதேவி தம்பதிகளின் அன்பு மகனும் மகாதேவன் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் இந்திரமலர், தயாபரன், இந்திரபவானி, கண்ணன், கலைச்செல்வி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கௌரிகாந்தன், தயாபரன், தவக்குமார், வனஷா, செந்தில்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

தகவல்:
சண்முகராசா (தந்தை)

இணுவில் மேற்கு,
இணுவில். (73011)

### சிவலிங்கம் சிவதாசன்
(H. N. B. முன்னாள் லிகிதர்)

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சிவலிங்கம் சிவதாசன் (முன்னாள் லிகிதர், H.N.B., யாழ்ப்பாணம், திருகோணமலை) 22-01-2000 சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

இவர் செல்லையா சிவலிங்கம் - மசேஸ்வரி தம்பதிகளின் ஏக புத்திரனும் நவரத்தினசாமி – ராஜேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் நிரஞ்சனியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-01-2000 சனிக்கிழமை இந்தியாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தங்கவேல் மாளிகை** **ச. ஹரிஹரன்** (கண்ணன்)
(வரணி வேலுப்பிள்ளை வீடு) (மைத்துனர்)
உரும்பிராய் மேற்கு. கொழும்பு.
021 - 2559 — தொலைபேசி: — 074 - 513234
(73009)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 24
கன்னாகம் வருஷப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்மாள் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட் காலை 9-30 மணிக்கு இடம் பெறும்.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க் காப்பு சார்த்தும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது. தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி சங்காபிஷேகம் இடம் பெறும். (ந)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 24
சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை ஏகதின இலக்ஷார்ச்சனைப் பெருவிழா நடைபெறும்.

காலை 9 மணிக்கு அர்ச்சனை ஆரம்பமாகி பிற்பகல் 2-30 மணிக்கு அக்னிமுகாந்தம், தர்ப்பணம் என்பனவும் மாலை சண்டி ஹோமம் தாராஹோமம் விசேஷதிரவிய ஹோமம், என்பனவும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதி உலா வருவார். (ச)

★ ★ ★

கொழும்புத்துறை ஜன 24
தொல்புரம் வழக்கம்பரை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்திலும், தொல்புரம் கொட்டடியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் ஆலயத்திலும் இன்று திங்கட்கிழமை பூரத் திருவிழா விசேட அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்பாக இடம் பெறும்.

அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (இ-8-30)

★ ★ ★

கத்தோலிக்க யாத்திரைத் தலங்களில் ஒன்றான யாழ். புதுமை மாதா ஆலய வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

நவநாள் வழிபாடுகளைத் தொடர்ந்து அடுத்த மாதம் 3 ஆம் திகதி காலை யாழ். ஆயர் பேரருட் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெறும் திருநாள் திருப்பலிப் பூசையுடன் வருடாந்த உற்சவம் நிறைவுறும். (ஐ-173)

## பழைய மாணவர் சங்கம் உதவி

அச்சுவேலி, ஜன. 24
அச்செழு சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு பழைய மாணவர் சங்கம் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடம் மற்றும் வகுப்பறை அமைப்புக்களைச் செய்து கொடுத்துள்ளது.

இடம் பெயர்ந்து தற்காலிகமாகப் புதிய இடத்தில் இயங்கி வரும் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்திற்கு கதிரை, மேசை மற்றும் வகுப்பறைத் தளபாடங்களையும்வகுப்பறை அமைப்பு வேலைகளையும் பழைய மாணவர் சங்கம் செய்து கொடுத்துள்ளது. (க-11)

## சிப்பாய்கள் காயம்

கொழும்பு, ஜன. 24
வெலிஓயாப் பகுதியில் நேற்று முன்தினம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர் எனவும் —

இதில் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர் எனவும் [illegible] அறிவித்துள்ளது. (இ-7)




### விக்ரம்-ராஜன்-கங்கு போட்டித் தொடரில்

## கொக்குவில் மத்தி, யாழ். பல்கலை. நேற்றைய ஆட்டங்களில் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 24
நான்கு விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 'விக்ரம்—ராஜன்—கங்கு' வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியும் யாழ். பல்கலைக் கழக அணியும் வெற்றிபெற்றன.

காலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணி ஆட்டநேர இறுதியில் 9 விக்கெட்டுக்களை இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. கேதீஸ் 45 ஓட்டங்களையும் சுதாகரன் 43 ஓட்டங்களையும் பெற்றனர். தொடர்ந்து ஆடிய ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணி 100 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தது. இதன் மூலம் கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழக அணியை 81 ஓட்டங்களால் வென்றது.

பிற்பகல் நடைபெற்ற இரண்டாவது ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழக அணி ஆட்டநேர இறுதியில் 8 விக்கெட்டுக்களை இழந்து 151 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 2 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டங்களில் வெற்றி பெற்ற கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணியும் யாழ். பல்கலைக்கழக அணியும் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளன. (இ-8)

## 15 ஓட்டங்களால் ஆஸி வெற்றி

மெல்போர்ன், ஜன 24
மூன்று நாடுகள் பங்குபற்றும் 'கால்ட்டன் அன் யுனைட்டட்' கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம் பெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணியை 15 ஓட்டங்களால் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி அபாரமாக ஆடி ஆட்ட நேர இறுதியில் 9 விக்கெட்டுக்களை இழந்து 260 ஓட்டங்களைப் பெற்றது. ஆஸ்திரேலிய அணி சார்பில் மைக்கல் பெவன் அரைச் சதம் அடித்தார்.

பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பாகிஸ்தான் அணி வீரர் இஜாஸ் அகமட் 83 ஓட்டங்களை விளாசினார். ஆஸ்திரேலிய அணி வீரர் ஷேன் லீ 4 விக்கெட்டுக்களை சாய்த்தார்.

நாளை இந்திய – பாகிஸ்தான் அணிகள் அடிலைட்டில் மோத உள்ளன. (இ-8)

## 19வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ணபோட்டி முடிவுகள்

கொழும்பு, ஜன. 24
நடைபெற்றுவரும் 19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில்—

தென் ஆபிரிக்கஅணி அயர்லாந்து அணியை 10 விக்கெட்டுக்களாலும்கென்ய அணி நமீபிய அணியை 54 ஓட்டங்களாலும் ஒல்லாந்து அணி அமெரிக்காஸ் அணியை 7 ஓட்டங்களாலும் பங்களாதேஷ் அணி ஸிம்பாப்வே அணியை 82 ஓட்டங்களாலும் வென்றன. (இ)

### தோல்வியைச் சந்தித்த பின்னர்

## பல ஆட்டங்களில் மோதும் மேற்கிந்தியத் தீவுகள் அணி

பாபியூடா, ஜன. 24
நியூஸிலாந்து அணியுடன் பலத்த தோல்வியைச் சந்தித்துக்கொண்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடர்ந்து தாயகத்திலும், இங்கிலாந்திலும் பல ஆட்டங்களில் பங்கு பற்ற உள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி ஸிம்பாப்வே அணியுடன் தாயகத்தில் விளையாட உள்ள டெஸ்ட் போட்டிகளில் முதல் டெஸ்ட் போட்டி மார்ச் 16 முதல் 20 வரையும், இரண்டாவது டெஸ்ட் போட்டி மார்ச் 24 முதல் 28 வரையும் இடம்பெறும்.

பாகிஸ்தான் அணியுடன் தாயகத்தில் ஆட உள்ள டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் போட்டி ஏப்ரல் 28 முதல் மே 2 வரையும், இரண்டாவது டெஸ்ட் போட்டி மே 11 முதல் 15 வரையும், மூன்றாவது டெஸ்ட் போட்டி மே 19 முதல் 23 வரையும் இடம் பெறும்.

இதனிடை ஏப்ரல் முதலாம் திகதி முதல் 19 வரை ஸிம்பாப்வே பாகிஸ்தான் அணிகளுடனான முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடரிலும் இந்த அணி பங்குகொள்ளும்.

இதனை அடுத்து மேற்கிந்திய தீவுகள் அணி 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரை விளையாட மே மாத இறுதியில் இங்கிலாந்து பயணமாகும். (இ-8)

## ஆரம்ப நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன. 24
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுககு உட்பட்ட பகுதிகளில் உள்ள பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி தொடர்பான ஆரம்ப நிகழ்வுகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

விளையாட்டுக் கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டுமென நல்லூர் பதில் பிரதேச செயலர் சி. வேல்முருகோன் பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளவத்தை கடற்கரையில் 30 தமிழர் கைது

கொழும்பு,ஜன.24

வெள்ளவத்தைக் கடற்கரையோரப் பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது 30 தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

பொலீஸாரும், விசேட அதிரடிப் படையினரும் கூட்டாக இணைந்து இந்தத் தேடுதலை மேற்கொண்டனர் எனவும் -

இந்தத் தேடுதலின்போது கைது செய்யப்பட்ட 20 தமிழ் இளைஞர்களும் 10 யுவதிகளும் வெள்ளவத்தைப் பொலீஸ் நிலையத்தில் நேற்று வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் எனவும் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (இ-7)

## அரியாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் மற்றொருஷெல் கொய்யாத்தோட்டம் கிறிஸ்துராசா தேவாலயம் மற்றும் பிள்ளையார் கோயிலடிப்பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் எஸ்கலன் செபமாலையம்மா (வயது 48) என்ற குடும்பப்பெண் காலில் பலத்த காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றிரவு தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்துவெடித்ததைத் தொடர்ந்து அரியாலை, கொய்யாத்தோட்டம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலர் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம் பெயர்ந்ததாக நேற்றிரவு அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (இ-7-8)

## தமிழர்கள் கைது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை அதிகாலை 4மணி முதல் பிற்பகல் 2 மணிவரை கம்பஹா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மற்றும் கொழும்பு மாவட்டத்தில் உள்ள கொலன்னாவையிலும் 3,000க்கும் மேற்பட்ட தமிழ்ப் பொதுமக்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதுடன் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டதை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

குற்றச்செயல் ஒன்று தொடர்பாக சந்தேகம் இருந்தால் மாத்திரம் ஒருவரைக் கைது செய்யச் சட்டம் அனுமதிக்கின்றது. விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களைக் கைது செய்யும் நோக்கத்துக்காக, பாரிய அளவில் தமிழர்களைக் கைது செய்து, தடுத்துவைத்து, தலையாட்டிகள் முன் நிறுத்துவதும், வீடியோ படம் எடுப்பதும் முற்றிலும் சட்ட விரோதமானது. அது மாத்திரமன்றி அரசியல்சாசனத்தின் கீழ் ஒவ்வொரு பிரஜைக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கும் தனிமனித சுதந்திரம் என்னும் அடிப்படை மனித உரிமையையே இது அப்பட்டமாக மீறும் அக்கிரமம் என்பதை அழுத்தந்திருத்தமாக நாம் கூறிவைக்க விரும்புகின்றோம்.

இரவு வேளையில் அணிந்திருந்த உடையுடன், தேடுதல் வேட்டையின் போது கைதுசெய்யப்பட்ட பெண்கள் மற்றும் அவர்களுடன் சேர்ந்து வர வேண்டிய நிலையிலிருந்த குழந்தைகள் அனைவரும் பல மணித்தியாலங்களாக அடிப்படைத் தேவைகள் மறுக்கப்பட்ட நிலையில் சந்தேகநபர்களாக நடத்தப்பட்டதும், கர்ப்பிணிகள் மற்றும் நோயாளிகள் கூட இதே நிலைக்கு ஆளானதும் அவர்கள் அனைவருமே தமிழர்கள் என்ற காரணத்தினாலேயே என்பதைச் சிந்திக்கும்போது முழுத்தமிழ் இனமுமே இன்று சந்தேகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது என்பதை எவரும் மறுக்கமுடியாது.

தற்கொலைக் குண்டுதாரிகள் உட்பட கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஊடுருவியிருக்கும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களைத் தேடிக் கைதுசெய்வதை எவரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால், இந்த நடவடிக்கைகள் சட்டத்துக்கு அமைவாகவும், நாகரிக சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் வழிமுறைகளை மீறாத விதத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வயது வந்த ஒவ்வொரு தமிழ்ப் பிரஜையையும் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் என்ற கண்ணோட்டத்துடன் சந்தேகிப்பது சட்ட ரீதியானதோ அல்லது நாகரிகமானதோ அல்ல. எந்தவொரு பிரஜையும் கைதுசெய்யப்படுவதற்கு, அவர் தொடர்பான தகவல் அல்லது வேறு ஏதாவது ஆதாரத்தின் அடிப்படையில் அமைந்த சந்தேகம் இருந்தால் மட்டுமே சட்டம் அதை அனுமதிக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இதற்கு முன்னரும் இம்மாதம் 7ஆம் திகதி கொழும்பு நகரில் இதே போன்ற பாரிய தேடுதல் நடவடிக்கையில் 3000க்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். ஆயினும் அப்போது சிக்கியிராத வெடிமருந்துகள் இரு நாள்களின் பின் கொட்டாஞ்சேனையில் கைப்பற்றப்பட்டன. இருட்டு அறை ஒன்றில் கறுப்புப் பூனை ஒன்றைத் தேடுவது போலல்லாமல், நம்பகமான தகவல்களின் அடிப்படையில் நடத்தப்படும் புலன் விசாரணைகள் உரிய பயனை ஈட்டிக்கொடுக்கும் என்பதற்கு இச்சம்பவம் நல்லதோர் உதாரணமாகும். கண்மூடித்தனமாக, வகை தொகையின்றி தமிழ் மக்களைக் கைது செய்து தாகத்துக்கும் பசிக்கும் மத்தியிலும், இயற்கைக் கடன்களைக் கழிக்க முடியாத அசௌகரியமான சூழ்நிலையிலும் அவர்களை விசாரித்து, தலையாட்டிகளின் முன் நிறுத்தி, வீடியோ படம் எடுத்து பல மணித்தியாலங்கள் இம்சைப்படுத்தி விட்டு, பின்னர் விடுதலை செய்தபின் "பொதுமக்கள் அனைவரும் இந்த நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினார்கள்" என்று அரசாங்கம் அறிவிப்பது கேலிக்குரியதாகும்.

இவ்விதம் தமிழ் மக்களைத் துன்பப்படுத்துவதன் மூலம் எவரும் எதையும் சாதித்துவிட முடியாது. அதேநேரத்தில் இத்தகைய பாரிய அளவிலான மனித உரிமைமீறல்கள் அனைத்தும் பெரும்பான்மையான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொடர்ச்சியான ஆதரவுடன் ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்றத்தினால் நீடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அவசரகாலச் சட்டத்தின் கீழேயே மேற்கொள்ளப்படுகின்றன என்பதை ஒவ்வொரு தமிழ்ப் பிரஜையும் மறந்துவிடக்கூடாது - என்றுள்ளது.

## அரசின் தீர்வு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் வகிக்கும் கட்சிகளுடனும் ஐ.தே.கவுடனும் தமிழ் - முஸ்லிம் கட்சிகளுடனும் அரசாங்கம் பேச்சு நடத்தவுள்ளது.

சகல கட்சிகளுடனும் இணக்கப்பாடு ஏற்பட்ட பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தீர்வு யோசனைகளுக்கு ஆதரவளிக்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கும்.

இப்படி அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (இ-5-7)


வட்டுக்கோட்டையில் (தனியார்) வைத்தியசாலையை

### வாழ்த்தி வரவேற்கின்றோம்

இன்று திங்கட்கிழமை (24-01-2000) உதயமாகும் வட்டுக்கோட்டை வைத்திய நிலையத்தினை வாழத்தி வரவேற்பதுடன் இங்கு கடமையாற்ற வருகின்ற வைத்திய கலாநிதிகளுக்கும் இதனை இயங்க வைக்க அயராது உழைத்த மூளாய் வதி இளைஞர்உடலுள விருத்திச் சங்கத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறோம். அதேசமயம் இந்த வைத்தியசாலையில் தினந் தோறும் மாலை 3.30மணி முதல் 6.30மணி வரை இடம்பெற உள்ள பொதுவைத்தியம், குழந்தை மருத்துவம், மகப்பேற்றுச் சிகிச்சையும் ஆலோசனையும், பெண்நோயியல் சிறுசத்திரசிகிச்சை போன்ற சேவை யினைப் பெற்று நோயற்ற வாழ்வு வாழ எமது பிரதேச மக்களை வேண்டுகின்றோம்.

ஸ்ரீ துர்க்கா ஸ்ரோர்ஸ்
முருகன் களஞ்சியம்
ராஜ் தொலைத் தொடர்பகம்
வட்டுக்கோட்டை.

(72979)


திருநாடலங்கரித்த
அமரகுரு இ.யோ.அருமைநாயகம்
அடிகளார் மீது
இரங்கற் பா



அதிமதுரக் குணசீலா அன்பின் ஊற்றே
அருமை நாயகனெனவே வாழ்ந்த செல்வா
அதிபரெனப் புனிதவளன் அச்ச கத்தே
ஐந்தாண்டின் அளவாகக் கடமை யாற்றி
மதிவலனே மனவளனே மனித நேய
மாண்பினனே எனநாங்கள் மகிழ்ந்தே நாளும்
துதிபுகல வீற்றிருந்தீர் எங்கள் நெஞ்சம்
துடிதுடிக்கப் பறந்ததுயர் மறக்கப் போமோ?

இறைபணியின் அர்ப்பணத்தால் விளைந்த ஆர்வம்
எனதுகடன் பணியொன்றே என்ற தாகம்
நிறைவுறவே இளமைநலம் பிழிந்த நோய்கள்
நெஞ்சகத்தே துயரூட்டி உடலை வாட்ட
மறைமுகமாய் அவையனைத்தும் பிறர் காணாதே
மறைத்தபடி உழைத்துயர்ந்த மகிமை தந்தாய்
சிறகிழந்த பறவைகளாய் நலம்பெற் றோர்நாம்
செல்வமுகம் காணாதே தவிக்கின் றோமே

குருத்துவத்தின் தொண்டுடனே சமூக சேவை
குருமடத்தின் மாணவரும் பயில வைத்தீர்
வருத்துமுள வாதையிலும் ஆயர் தாதை
வகுத்தபணி உவப்பினுளம் மலர்ந்தே செய்தீர்
சிரித்தமுகக் குழந்தைகளின் உறவே நட்பின்
சிறந்தகுணப் பண்பாளா பொறுமைக் குன்றே
மருத்துவமே போதுமினி என்றே மோட்ச
மணிமுடியே சூடுதற்குச் சென்றீர் இன்றே!

யாழ். புனிதவளனார்
கத்தோலிக்க அச்சகத்தோர்.

(73000)

## ஊரடங்கு நேரத்தில் யாழ்.நகரில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜன.24

யாழ். நகரில் ஊரடங்குச் சட்ட நேரத்தில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

நேற்று முன்தினம், யாழ். சோமசுந்தரம் வீதியிலுள்ள வீடொன்றின் கூரையைப் பிரித்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தொலைக்காட்சிப்பெட்டி மற்றும் டெக் போன்றவற்றை எடுத்துச்சென்றுள்ளனர்.

இதேநாளில் சுண்டுக்குளி யுவானியார் ஆலயத்துக்கு அருகிலேயுள்ள ஒரு வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று திருடிச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-5-139-173)

## குழந்தைகள் பால்மாவுக்கான தட்டுப்பாட்டை நீக்கக் கோரிக்கை

வடமராட்சி,ஜன.24

யாழ். குடாநாட்டு குழந்தைகளுக்குத் தேவையான பால்மா வகைகளை விரைவாக அனுப்பிவைத்து குழ்ந்தைகளைப் பட்டினிச்சாவில் இருந்து காப்பாற்றுமாறு சாவகச்சேரி பிரதேசசபைத் தலைவர் அன்ரன் பொன்னையா ஜனாதிபதிக்குஅனுப்பி வைத்துள்ள அவசரச் செய்தியில் தெரிவித்துள்ளார்.


கடந்த சில மாதங்களாக குழந்தைகளுக்கான பால்மாவுக்கு குடாநாட்டில் பற்றாக்குறை இருந்து வருவதனால் குழந்தைகள் பாதிக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-5)

## சுகாதாரப் பணிமனை கோப்பாயில் திறப்பு

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குப் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் கடந்த வெள்ளியன்று சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

பிரதி மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்துவைத்தார். இந்தநிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், சுகாதாரத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.மகேந்திரன், சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் என். சிவராசா உட்பட பிரதேச மக்கள் பலர் கலந்து கொண்டனர். (ஐ-180)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். தனியார் கல்வி நிலையங்களின் முன்னோடியும்
எமது மாண்புமிகு இயக்குநருமாகிய

**க.ஆனந்தக்குமார் (Bond)**

அவர்களின் மரணச்செய்தி கேட்டு
ஆழ்ந்த அதிர்ச்சி அடைகின்றோம்.
அன்னாரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

T.P. NO :- 075-515309
(COLOMBO)

அலுவலர்கள்,
BOND யாழ்ப்பாணம்.

(72996)

## மரண அறிவித்தல்

**அருட்திரு. ஈ.ஜே.அருமைநாயகம் B.A**

சுருவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.மறைமாவட்ட ஆயரின் செயலாருமாகிய அருட்திரு ஈ.ஜே. அருமைநாயகம் அடிகளார் 23.01.2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற எஸ்.ஈ. ஐயாத்துரை, திருமதி றோசமுத்து ஐயாத்துரை தம்பதியரின் அன்பு மகனும் பீற்றர் (லண்டன்), மதுரநாயகம் (பிரான்ஸ்), திருமதி மரிற்றோ ஜெறாட் (கொழும்பு), மாறி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் மரினா (லண்டன்), தேவி (பிரான்ஸ்), ஜெறாட் (செல்லம்ஸ், கொழும்பு) ஆகியோரின் அருமை மைத்துனரும் காலஞ்சென்ற யூட், திருமதி நிற்றா பிறிமன், டெக்ஸ் ஆகியோரின் மாமனாரும் எலிசா, சேவியன், நிரஞ்சன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அஞ்சலிக்காக யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் அடிகளாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை (24.01.2000) மாலை 4.00 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*108, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*
(73010)

*தகவல்:*
**திருமதி றோசமுத்து ஐயாத்துரை**
(தாயார்)


சிவா திரையில்
கே.கே.எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

10.30, 2.30

சரத்பாபு, பூஜா
நடித்த
காதல் ரோஜாவே
(புதிய வெளியீடு)

(73012)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24-01-2000 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org